# திருப்பாவை



ராசீ

# திருப்பாவை

பேராசிரியர்
டாக்டர் ரா.சீனிவாசன்
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி

அணியகம்
சென்னை-30.

விலை ரூ. 20-00

தெய்வத் திருப்பணிநூல் வெளியீடு



உதிரும் சருகு ஆகாமல்
முதிர்ந்த கனியாக வாழ்ந்த

**திருவாளர்**

**R. K. நாயுடு**


அவர்களுக்குக் காணிக்கை



**இந்நூலினை வெளியிடப்**
பொருள் உதவியவர்
அவர் துணைவியார்

**K. தேவகி அம்மையார்**

முதற்பதிப்பு—1993
இரண்டாம் பதிப்பு—1995



ஆசிரியர்
டாக்டர் ரா. சீனிவாசன்

வெளியீடு

அணியகம்
5, செல்லம்மாள் தெரு,
செனாய் நகர்,
சென்னை—600030.

V.P.Pயில் நூல்களை எழுதிப் பெறலாம். V.P.P. தபால் செலவு பதிப்பகம் ஏற்கும்.

சங்கப்பலகை மையங்களில் அணியக வெளியீடுகள் நேரில் பெறலாம்.

அச்சிட்டோர் : சித்ரா பிரிண்டோ கிராபி, சென்னை-14.

# முன்னுரை

ஆண்டாள் இது இயற்பெயரா காரணப் பெயரா தெரியாது; நாச்சியார் என்ற மற்றொரு பெயரும் உள்ளது. இப்பெயராலேயே அந்தப் பாடற்பகுதி பெயரிடப் பட்டுள்ளது. நாச்சியார் திருமொழி என்று அத்தொகுப்புக்குப் பெயர் வழங்குகிறது.

நாச்சியார் திருமொழியில் ஏறக்குறைய நூற்றைம்பது பாடல்கள் உள்ளன. இவை திருப்பாவை போலப் பரவி யுள்ளன என்று கூற முடியாது. நாச்சியார் திருமொழி முழுவதும் காதல் பாடல்களே. கண்ணனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் வைத்துப் பாடப் பெற்றவை இவை.

பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகவே பாடி அவன் இளமை விளையாட்டையும் அழகையும் இனிமை யையும் காண்கின்றார். இறைவனை அம்மையாகவும் அப் பனுமாகவும் வணங்குதல் தக்கதாகும்; அப்பொழுது மதிக்க முடியுமேயன்றி அவனோடு இரண்டறக் கலக்க முடியாது; இறை உணர்வோடு தாம் கலப்பதையே ஆழ்வார்கள் விரும்புகின்றனர்; தன்னுள் அவனை வைத்தும், அவனுள் தன்னை வைத்தும் ஒன்றிட முனைகின்றனர். அத்தகைய உணர்வைத் தரக்கூடியது காதல் உணர்வே; மற்றும் கண்ணன் ஆயர் மகளிரோடு ஆடியும் பாடியும் மகிழ்ச்சி தந்து உறவாடிய நிகழ்ச்சிகள் மறக்க முடியாதவை. கண்ணன் அழகன்; கன்னியர் ஒவ்வொருவரும் அவனைக் காதலிக்கத் தக்க கவர்ச்சி அவன்பால் உள்ளது. காதலைப் பற்றிப் பாடும்போது கவிதை சுவை பெறுகிறது; உணர்வுப் பெருக்கால் உயர்கிறது; ஆழ்வார்கள் பலர் அவனைக் காதலிக்கும் பெண்ணின் மனநிலையில் இருந்து பாடி

உணர்வு மிக்க கவிதைகளைப் படைத்தனர்; மடலேறுவேன் என்று கூறிப் பாடும் பாடல்கள் கண்ணன் மாட்டுக்கொண்ட காதலை வெளிப்படுத்துகின்றன.

நாச்சியார் திருமொழி வேங்கடவனுக்குத் தன்னை விதிக்கும்படி மன்மதனை வேண்டும் பாடல்கள் கொண்டவை. அவர்கள் பாடிய பாடல்களுள் மிகச் சிறப்பான ஒன்று மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே இருக்கலாம்.

''கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவள வாய்தான் தித்திருக்குமோ
மருப்பொசித்த மாதவன் தன் வாய்ச்சுவையும்
நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே''

என்று பாடும் பாடல் நம் உள்ளத்தைத் தொடுகிறது.

''அவன் பவளவாய்; அதன் சுவை சங்குக்குத் தான் தெரியும்; அதனை எனக்குச் சொல்வாயாக'' என்று கேட்கிறாள் தலைவி.

இத்தகைய காதற்பாட்டுகள் பல நாச்சியார் திருமொழியில் இடம் பெற்றுள்ளன. அதே காதல் உணர்வைத் தான் திருப்பாவை வெளிப்படுத்துகிறது என்று பலர் தவறாகக் கருதக்கூடும்; இது முற்றிலும் மாறுபட்டு இறைவனைப் பற்றிப் பாடும் துதிப்பாடல்களாகவே விளங்குவது இதன் தனிச்சிறப்பு ஆகும்.

நாச்சியார் திருமொழி காதற்சுவை மிக்க பாடல்கள் பெற்றிருந்தும் திருப்பாவையே போற்றிப் படிக்கும் பாமாலையாக விளங்குகிறது. காரணம் என்ன? ''நாடு வாழ மக்கள் வாழ'' இறைவனை வேண்டுகின்றார். ''மழை பொழிக!

வளம் சுரக்க! செல்வம் கொழிக்க'' என்று சமுதாய உணர்வுப் பாடல்களாக இவை விளங்குவதால் இவை பெரிதும் போற்றப்படுகின்றன.

திருப்பாவை படிக்கிறோம்; அது என்ன கூறுகிறது என்று கேட்டால் பாவை நோன்பு பற்றிக் கூறுகிறது என்ற பதில்தான் கிடைக்கிறது. மார்கழி மாதம் மழை பெய்யும் மாதம்; புதுநீர் வெள்ளம் காணும் பருவம்; அப்பொழுது மக்கள் ஆறுகளுக்குச் சென்று நீராடி மகிழ்வு தெரிவித்துக் கொள்கின்றனர். கன்னிப் பெண்கள் காலையில் எழுந்து ஒருவர் மற்றவரை எழுப்பிப் பாவையை வழிபடும் களம் நோக்கிச் செல்கின்றனர். அந்த விழாக் கொண்டாடினால் நாட்டில் மழை பெய்யும் என்று நம்புகிறார்கள்.

இந்த விழா தொன்று தொட்டு வரும் திருவிழா; பாவையின் பேரைச் சொல்லி நோன்பு நோற்று அத்தெய் வத்தை வழிபடுகின்றனர். இப்பாடல் அமைப்பைக் கண்ணனின் பாமாலையாக மாற்றியது ஆண்டாளின் தனித்திறம்.

பாவை வழிபாட்டுக்குப் பறை தேவை என்றும், அதனைத் தமக்குத் தருமாறும் இளம் கன்னியராகிய ஆய மகளிர் பாடுவதாக இப்பாடல்கள் அமைந்துள்ளன. ஏனைய ஆழ்வார்களைப் போலவே இறைவனோடு தம் உறவு எப் பொழுதும் தொடர்ந்து நிற்க வேண்டும் என்பதே அவர்கள் இறுதி வேண்டுகோள்.

இந்நுட்பதைப் பாயிரமாக வந்துள்ள தனியன்களில் ஒன்று நன்கு எடுத்துக் காட்டுகிறது.

இதனை ''நற்பாமாலை'' என்றே கூறுகிறது.

கவித்துவமும், உயர்ந்த கருத்துகளும், சமுதாய நல் உணர்வு வளர்க்கும் அமைப்பும் கொண்டுள்ள இத்திருப் பாவை ''நாட்டுப் பாடல்'' முறையில் நலம் கனிந்து நம் உள்ளத்தை உருக்கி உயர்த்துகிறது.

பாட்டுக்குப் பொருள் விளங்காததால் அது அந்நியமாகி விடுகிறது. அதற்குத் தக்க வகையில் பொருள் கூறி விளக்கு வது தேவைப்படுகிறது. அப்பணியினை இந்நூல் செய் துள்ளது.

பாவைப் பாட்டு கிராமியப் பின்னணி கொண்டு விளங்கு கிறது. ஆயர்தம் கூட்டு வாழ்க்கை சித்திரிக்கப்படுகிறது. மழை வேண்டும்; நாடு வாழ வேண்டும் என்று பாடுவதால் இவை நாட்டுணர்வுப் பாடல்களும் ஆகின்றன.

துயிலும் மகளிரை எழுப்பி இறைவன்பால் உய்த்து வழிபடச் செய்வர்; மாயையில் உழலும் மாந்தரைத்தட்டி எழுப்பி ஞான நெறிக்கண் உய்த்து இறைவன் திருவடி களை வணங்கச் செய்யும் கருத்தும் இதில் உள்ளது. எனவே தத்துவப் பொருள் மிடைந்த ஞான நூலும் இது ஆகிறது.

யாப்பு அமைதியோடு பாடல் ஒன்றுக்கு எட்டு வரிகள் இடம்பெற்றுள்ளன. 'சங்கத் தமிழ்' என்று பாராட்டப் படுகிறது. செந்தமிழ் நடையில் இது எழுதப்பட்டுள்ளது. சுவை மிக்க பாக்கள் இவை; உரைகள் இவற்றிற்கு விளக்கம் தருகின்றன.

**ரா. சீனிவாசன்**

''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்''

திருப்பாவை—29.

# திருப்பாவை

## நூல் அறிமுகம்

பாவை வழிபாட்டைக் கூறுவதால் இது திருப்பாவை எனப்பட்டது. பாவை என்பது அவர்கள் வழிபட்ட பெண் தெய்வம்; அதைக் கார்த்தியாயினி என்று கூறுகின்றனர்.

பாவை வழிபாடு என்பது தொன்று தொட்டுத் தமிழ் நாட்டில் இருந்து வருகிறது. ''கொல்லிப் பாவை'' என்ற பெண் தெய்வத்தை வழிபட்டமை சங்க இலக்கிய வாயிலாகத் தெரிகிறது.

மார்கழி மாதம் நீராடுதல் ஒரு பெரு விழாவாகக் கொண் டாடப்பட்டது என்று தெரிகிறது. பாவையை வழிபட்டு ஆற்று நீரில் குடைந்து நீராடினர். இதுவே பாவை நோன் பின் அடிப்படையாகும்.

பாவை நோன்பு மேற்கொள்வார் சில கட்டுப்பாடுகளை மேற்கொண்டிருந்தனர் என்பது தெரிகிறது. நோன்புகள் நோற்பார் உணவு குறைத்தும், ஒப்பனை தள்ளியும் நியமத் தோடு ஒழுகுவர். அதனையே இப் பெண்களும் செய்தனர் என்பது தெரிகிறது.

இவ்விழாவில் பறை கொட்டினர்; சங்கு ஒலித்தனர்; பல்லாண்டு இசைத்தனர்; விளக்கு, கொடி, விதானம் அமைத்து அப் பாவைக்களத்தைச் சிறப்பித்தனர். இவை எல்லா விழாக்களிலும் மேற்கொள்பவையே.

இவ்விழாவுக்குப் பறையைக் கண்ணனிடம் கேட்டுப் பெறுவதாகக் கூறுவது புதுமை. அவனைப் பாடி இதனைப் பரிசிலாகத் தருமாறு வேண்டுகின்றனர். அவனைப் பாடு வதற்கு இதனை ஓர் வாய்ப்பாகக் கொண்டனர் என்பது தெரிகிறது. எனவே இது ஒரு பாமாலையாக அமைந்து விடுகிறது.

## ஆசிரியர் அறிமுகம்

ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்த விஷ்ணு சித்தர் என்னும் நாமம் கொண்ட பெரியாழ்வாரின் திருமகள் ஆண்டாள். பெரியாழ்வார் பாடிய பாடல்கள் 1. 'திருப்பல்லாண்டு' 2. 'பெரியாழ்வார் திருமொழி' என்பன ஆகும். அவர் இறைவனுக்கு மலர்மாலை சார்த்தும் திருப்பணியை மேற் கொண்டிருந்தார். அவரைப் 'பட்டர் பிரான்' என்று பாண்டிய மன்னன் பாராட்டி அவர் புலமையைச் சிறப் பித்தார். ஸ்ரீவில்லிபுத்தூருக்குப் புதுவை என்ற பெயரும் வழங்கியது.

இறைவனுக்குச் சூட்டும் பூமாலையை முதலில் தாம் சூடி நிலைக்கண்ணாடி முன் நின்று அழகு பார்த்து இவை திருமாலுக்கு அணிவிப்பதற்கு ஏற்றவை என்று முடிவு செய்தே ஆண்டாள் அனுப்புவர்; அதனால் இவர் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' எனப் பாராட்டப் பெற்றுள்ளார். திருப்பாவை என்னும் பாடல் தொகுதிக்கு முன்னால் 'தனியன்கள்' என்ற தலைப்பில் இரண்டு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவை அப்பாடல்களின் சிறப்பையும், ஆண்டாள் வாழ்க்கைக் குறிப்பினையும் தருகின்றன. அவை பாயிரம் எனக் கூறலாம்.

**அன்னவயல் புதுவை ஆண்டாள் அரங்கற்குப்**
**பன்னுதிருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையால்**
**பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை; பூமாலை**
**சூடிக் கொடுத்தாளைச் சொல்லு**

என்பது முதற்பாட்டு. இது திருப்பாவையைப் பற்றிய அறிமுகம்.

**அன்னவயல் புதுவை**—அன்னப் பறவைகள் சூழ்ந்த வளமான வயல்களை உடைய புதுவை என்னும் ஸ்ரீவில்லிபுத்தூரில்

**ஆண்டாள்**—(இயற்பெயர்)

**அரங்கற்கு**—திருமாலுக்கு

**பன்னு திருப்பாவை**—சொல்லிய பாவைப் பாட்டு

**பல் பதியம்**—பல செய்யுள்கள்

**இன்னிசையால்**—இனிய இசையோடு

**பாடிக் கொடுத்தாள்**—பாடியருளினாள்;

**நற்பாமாலை**—அவை நற்பாமாலை ஆகும்;

**பூமாலை சூடிக்கொடுத்தாளைச் சொல்லு**—இறைவனுக்குத் தான் முதற்கண் சூட்டி அழகு பார்த்துப் பின் கொடுத்தவளைப் பேசு (அவள் பெருமையைக் கூறுக).

**தொகுப்புரை**

''அன்னம் சூழும் வயல்களை உடைய புதுவை என்று வழங்கும் ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழும் ஆண்டாள் அரங்கநாதனுக்குப் பாட்டாக எழுதித் திருப்பாவைப் பதிகங்களை இனிய பண் வரையறையோடு பாடிக் கொடுத்தாள்; அவை

நற்பாமாலை யாகும்; பூமாலையைத் தான் சூடி நிலைக் கண்ணாடி முன் நின்று இவை அரங்கனுக்குச் சார்த்துவதற் குத் தக்கவையா என்று அழகு பார்த்துப் பின் இறைவனுக்கு அணிவிக்கத் தந்தாள். அவள் புகழைப் பேசு'' என்று கூறுகிறது இத்தனியன். இது ஆசிரியரைப் பற்றிய அறிமுக மாக அமைந்துள்ளது.

## சிறப்புரை

பன்னு பதிகம்-பனுவலாக அமைத்த பக்திப் பாடல்; பனுவல்-பாட்டு; பதிகம்-பத்துப் பாடல் கொண்டது பதிகம் எனப்படும்.

# திருப்பாவை

## பாடற் கருத்துகள்

1. மார்கழி மாதம் நிலா வீசும் நன்னாள்;
ஆயர்பாடிச் செல்வச் சிறுமியரே!
நாராயணன் நமக்கே பறை தருவான்;
நீராடத் துயில் எழுந்து வருக.

2. நாம் நம்பாவை நோன்புக்கு ஏற்கும்
செயல்களைக் கேட்பீராக, பரமன் அடிபாடுவோம்;
நெய் உண்ணோம்; பால் உண்ணோம்;
காலை விடியலில் நீராடுவோம்;
மையிட்டு எழுதோம்;
மலரிட்டு நாம் முடியோம்;
தீய கோள்சொல் சென்று ஓதோம்;
செய்யத்தகாதவை செய்யோம்;
தான தருமங்கள் செய்வோம்;
பிறவித்துயர் நீங்கும் செயல்களை
எண்ணிச் செயல்படுவோம்.

3. பாவையை வழிபட்டு நீராடினால்
நாடெல்லாம் திங்கள் மும்மாரி பொழியும்;
வளமை மிக்க பசுக்களும் செல்வமும் பெருகும்.

4. மழைக் கடவுளே! மழையை நிறுத்தாதே;
ஊழி முதல்வன் போல் மெய் கறுத்து,
ஆழி போல் மின்னி,
வலம்புரிபோல் அதிர்ந்து,
அவன் கையில் ஏவும் அம்புகளைப் போல
மழையை நீ பொழிவிக்க!
நாங்கள் மார்கழியில் நீராடி மகிழ்வோம்.

5. மாயன்; வடமதுரையில் பிறந்தவன்,
யமுனை நதித்துறையில் ஆயர்பாடியில் ஆடி
மகிழ்ந்தவன்;
ஆயர் குலத்தில் வளர்ந்தவன்; தேவகிக்குப்
பெருமை தேடித்தந்தவன். அவனைத்
தூய்மையாக நீராடி வந்து
வாயினால் பாடி, மனத்தினால் சிந்தித்து,
வழிபடுவோம்; எம் பாவங்கள் தீரும்;
மன மாசுகள் போகும்; தீமைகள் சேரா.

6. பறவைகள் ஆரவாரிக்கின்றன; நாரணன்
திருக்கோயிலில் சங்குகள் முழங்குகின்றன;
மூலப்பொருளாகிய பரமனை யோகியரும்
முனிவர்களும் 'அரி' 'அரி' என்று அழைக்கும்
ஒலி கேட்கிறது. இவற்றைக் கேட்டும்
உறங்குகிறாய்; துயில் எழுக.

7. 'கீசு' 'கீசு' என்ற கரிக்குருவிகள் ஒலி செய்கின்றன;
ஆய்ச்சியர் தயிர் கடையும் ஓசை கேட்கவில்லையா?
நாரணன் பெயரை அடியவர்கள் கூறி வழிபடும்
ஓசை காதில் விழவில்லையா; நீ கதவைத் திற.

8. கிழக்கு வெளுத்து விட்டது; எருமைகள்
காலாற மேய வெளியே அவிழ்த்து விடப்பட்டுள்ளன;
களம் நோக்கிச் செல்பவரைத் தடுத்து நிறுத்தியுள்
ளோம்;
பாவாய்! எழுந்திரு; பாடிப் பறைகொண்டு
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
நன்மைகள் பலவும் வாய்க்கும்; இதை நீ சிந்தித்துப்பார்.

9. துயில் அணைமேல் கண்வளரும் மாமன்
மகளே! மணிக்கதவம் தாள் திறப்பாயாக!
மாமி! அவளை எழுப்பமாட்டீரோ?
ஏன் உன் மகள்தான் ஊமையோ
அல்லது செவிடோ அல்லது வெறும் சோம்பல்தான்
காரணமா அல்லது தூக்க மயக்கமா. அவன்
நாமம் பலவும் நவில்வோம்; துயில் எழுக.

10. செல்வ வாழ்க்கையுடையீர்
யார் உள்ளே? பதில் கூடப் பேசமாட்டீர்களா!
வாசலையும் திறக்க மாட்டீர்;
கும்பகருணன் போரில் தோற்றான்;
அவனுக்கே உரிய தன் தூக்கத்தை உனக்குத்
தந்து விட்டானா! எழுந்திரு!
நாராயணனைப் போற்று, அப்புண்ணியன்
நமக்குப் பறை தருவான்.
செல்வமகளே எழுக! கதவைத் திறக்க!

11. கோவலர் தம் பொற்கொடியே!
புறப்பட்டு வருக! சுற்றத்துத் தோழியர் வந்து
உன் முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர்
பாடுகின்றனர். நீ மட்டும் ஏன்
எழாமலும், பேசாமலும் உறங்குகிறாய்?
செல்வ மகளே; துயில் எழுக.

12. நற்செல்வன் தங்கையே! பனி
எம் தலையில் வீழ நின் வாசற் கடை வந்து

நின்று மனத்துக்கு இனியவனைப் பாடவும்
நீ வாய்திறவாமல் இருக்கின்றாய்,
பேருறக்கம் விட்டு இனியேனும் எழுக.
அனைத்து வீட்டாரும் விழித்து எழுந்து வந்து
விட்டனர்.

13. பெண் பிள்ளைகள் எல்லாரும் கண்ணனின்
கீர்த்தியைப் பாடிவிட்டுப்
பாவைக் களம் சென்று விட்டனர்;
வெள்ளி எழுந்து விட்டது;
பறவைகளும் ஆராவாரிக்கின்றன;
பாவையே நீரில் முழுகி மகிழாமல்
நீ மட்டும் ஏன் படுக்கையில் கிடக்கிறாய்?
தனித்து நீ ஒதுங்குவது ஏன்?
எங்களோடு கலந்து வருக.

14. உங்கள் புழைக்கடைத் தோட்டத்துக்
குளத்தில் செங்கழுநீர் பூத்துவிட்டது;
ஆம்பலும் கூம்பிவிட்டது; தவத்தவர்
சங்கு ஊதி அவரவர் பணி செய்து தத்தம்
திருக்கோயில்களுக்குப் போய்க்கொண்டிருக்கின்றனர்;
எங்களை முதலில் எழுப்புவதாக வாய்ப்
பேச்சுப் பேசினாய்; நங்காய்!
எழுந்திரு; நாசிறக்கப் பேசுகிறாய்:
செயலில் கூசுகிறாய்; தாமரைக்
கண்ணனைப் பாடுவோம் வருக.

15. ''ஏடி இளங்கிளியே! இன்னமுமா தூக்கம்?
எழுந்திரு''
''ஏன் இப்படிக் கத்துகிறீர்கள் இதோ
வந்துவிடுகிறேன்''
''ஆமாம் வெறும் பேச்சுதான்; உன்னைப்
பற்றி எங்களுக்கு முன்னமே தெரியும்''
''நீங்கள்தான் கெட்டிக்காரர்களாக இருங்கள்;
அது நீங்களோ நானோ யாராவது இருந்து
போகட்டும்!''
''அதுசரி! விரைவில் புறப்பட்டு வருக!
நீ மட்டும் ஏன் தனிமைப் படுகிறாய்?''
''எல்லாரும் புறப்பட்டு வந்து விட்டார்களா?'
''வந்து விட்டதாகக் கருதிக் கொள்;
மாயவனைப் பாடுவோம் வா!''

16. நந்த கோபனின் அரண்மனைக் காவலனே!
மணிக்கதவம் தாள்திறப்பாய்;
ஆயர் சிறுமியர் எமக்குப் பறை தருவதாக
நேற்றுக் கண்ணன் வாக்குத் தந்துவிட்டான்;
நீராடி விட்டுத் தூய்மையாக வந்து
இருக்கிறோம் துயில்எழுப்பப் பாடுவதற்கு;
ஐயா! மறுப்புச் சொல்லாமல் உன்
கைகளால் கதவுகளைத் திறந்துவிடுக.

17. அறம் செய்யும் நந்த கோபாலா!
எழுக! யசோதாய் விழித்து எழுக!

உம்பர் கோமானே உறங்காது எழுக!
பலதேவா! நீயும் உன் தம்பியும்
உறங்காமல் துயில் எழுக.

18. நந்த கோபாலன் மருமகளே!
நப்பின்னாய்! கடை திறப்பாய்;
பொழுது விடிந்துவிட்டது;
கோழியும் கூவுகிறது; மாதவிப்பந்தல்
மேல் குயிலினங்களும் கூவுகின்றன;
உன் கணவனின் புகழை யாம் பாட
நீ வந்து கதவைத் திறப்பாய்;
யாம் மகிழ்வு அடைவோம்.

19. நப்பின்னையை அணைத்துக் கொண்டு
அவளைப் பிரிய மனமில்லாமல் கண்ணா
நீ உறங்குகிறாய்!
மைவிழியாளே! நீயும் அவனை
எழவிடமாட்டாய்! உன்னால்
பிரிந்து இருக்க இயலவில்லை.
இது நல்லது அல்ல; நியாயமாகப்
படவில்லை; அவனைத் துயில் எழுப்புக.

20. விமலா! நீ துயில் எழுக;
நப்பின்னை நங்காய்! நீயும் துயில் எழு;
உக்கமும் ஒளித்தட்டும் தந்து உன்
மணாளனை எழுப்பி எங்களிடம் அனுப்புக;
எங்களை நீராடச் செய்து மகிழவை;

21. நந்தனின் மகனே! விழித்து எழுக;
பகைவர்கள் தோற்று உன்னைச் சரண்
அடைவதைப்போல் யாம் வந்து உன்னைச்
சரண் அடைகிறோம்; போற்றிப்
புகழ யாம் வந்திருக்கிறோம்.

22. பகை அரசர் தம் ஆணவம் அடங்கி
உன் பள்ளிக்கட்டிலில் நீ எழும்வரை
காத்துக் கிடப்பதைப்போல யாமும் வந்து
கூடியுள்ளோம்; உன் அருட்பார்வை
எம்மேல் விழியாதோ? எங்கள்
தீவினைகள் தீர்ந்து போகும்.

23. மழைக் காலத்தில் மலைக் குகைகளில்
உறங்கி எழும் சிங்கத்தைப் போல நீ
துயிலிலிருந்து எழுந்துவந்து சிம்மாசனத்தில் அமர்க;
யாம் வந்த காரியம் கேட்டு அருள் செய்க.

24. அன்று இந்த உலகம் அளந்தாய்; உன்
திருவடிகளைப் போற்றி வணங்குகிறோம்.
தென்னிலங்கையில் வெற்றி பெற்ற
உன் வலிமையை வாழ்த்துகிறோம்;
சகடம் உதைத்தாய் அப்புகழைப் பேசுகின்றோம்.
கன்றினைக் குறுந்தடியாய்க் கொண்டு
விளவின் மீது வீசிக் கனிகளை உதிர்த்தாய்;
உன் ஆற்றலை மதிக்கிறோம்.

உன் கைவேல் பகைகெடுக்கும்;
அதன் வீரத்தைப் போற்றுகிறோம்;
இன்று பறை கொள்ள வந்திருக்கிறோம்;
எமக்கு அருள் செய்க!

25. நெடுமாலே! உன்னை வழிபட்டு நிற்கிறோம்;
பறை தருக; பறை தந்தால் உன் செல்வத்தையும்
ஆட்சியையும் யாம் பாடி வருத்தம் தீர்வோம்;
மகிழ்வோம்.

26. மார்கழி நோன்பு இதற்கு நீராடுவதற்கு
வேண்டுவன இவை; எங்கும் ஒலிக்கும்
பாஞ்சசன்னியம் போன்ற வெண்சங்கு;
பெரும்பறை; பல்லாண்டு இசைப்பவர்கள்;
கோல விளக்கு; கொடி; விதானம்; இவற்றை
மணிவண்ணா! நீ தந்தருள்க.

27. பகைவரை வெல்லும் சிறப்புடைய கோவிந்தா!
உன்னைப் பாடிப்பெறும் சன்மானங்கள்:
சூடகம்; தோள்வளை; செவிப்பூ; பாடகம் என்று
இத்தகைய
அணிகலன்கள் அணிவோம்; புதிய ஆடை
உடுப்போம்; பாற்சோறு நெய் முழங்கை
வழியக்கூடியிருந்து உண்போம்;
மனம் குளிர்வோம்.

28. அறிவு குறைந்த ஆயர் யாம்; எம்
குலத்தில் நீ பிறந்து எங்களுக்கு உயர்வு தந்தாய்

இந்த உறவு நீடித்து நிற்கும்; அறிவில்
குறைந்தவர்கள் யாம்; அன்பினால் உன்னைச்
சிறுபேர் இட்டு அழைத்திருப்போம்; அதைப்
பொருட்படுத்தாதே! இறைவா! நீ
பறை தருக.

29. இந்தச் சிறுகாலைப் பொழுதில்
வந்து உன்னைச் சேவித்துப் பொற்றாமரை
அடி போற்றுகின்றோம்;
மாடு மேய்க்கும் குலத்தில் பிறந்த
உனக்கு ஏவல் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்;
இன்று இந்த உறவு பறை
கொள்வதற்கு மட்டும் அன்று; இன்றைக்கும் ஏழு ஏழு
பிறவிக்கும் உன்னை விட்டுப் பிரியமாட்டோம்;
உனக்கே யாம் ஆட் செய்வோம்;
எம் ஏனைய ஆசைகளை அகற்றி விடுக!

30. கடல் கடைந்த மாதவன்; அவனைச்
சேயிழையார் சென்று வணங்கி அங்குப்
பறை கொண்டனர்; இச் செய்தியைப்
பட்டர்பிரான் கோதை சங்கத் தமிழில்
பாடி இருக்கிறாள்; இம் முப்பது பாடல்களையும்
பிழையின்றிப் பாடுபவர் இறைவன்
திருவருள் பெறுவர்; இன்புற்று வாழ்வர்.

# நூல்

## 1. மார்கழித்திங்கள்

(நீராடுவோம்)

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்!

**பதவுரை**

**மார்கழித் திங்கள்**-மார்கழி மாதம்
**மதிநிறைந்த நன்னாளால்**-நிலாவீசும் விடியற் பொழுதில்

**நீராடப்போதுவீர்**-நீராட வருபவர்
**போதுமினோ**-புறப்பட்டு வருவீராக
**நேர் இழையீர்**-அழகிய ஆபரணங்களை உடைய செல்வ மகளிரே

**சீர் மல்கும்**-வளம் மிக்குள்ள
**ஆய்பாடி**-ஆயர் பாடியில் வாழும்
**செல்வச் சிறுமீர்கள்**-செல்வக்குடியில் பிறந்த சிறுமியர்களே

**கூர்வேல்**-கூரிய வேலினையும்
**கொடுந்தொழிலன்**-பகைவரைத் தாக்கும் வீரச் செயலையும் உடைய
**நந்தகோபன் குமரன்**-நந்த கோபன் மகனும்

**ஏர் ஆர்ந்த கண்ணி**-மணம் மிக்க பூமாலையைச்சூடிய
**யசோதை**-யசோதை பிராட்டியின்
**இளஞ்சிங்கம்**-இளஞ்சிறுவனும் ஆகிய
**கார்மேனி**-கரிய மேனியையும்
**செங்கண்**-சிவந்த அழகிய கண்களையும்
**கதிர்மதியம் போல் முகத்தான்**-ஒளிவீசும் சந்திரன் போன்ற முகத்தினையும் உடையவன்
**நாராயணனே**-நாரணனே (திருமாலே)
**நமக்கே பறை தருவான்**-நமக்கு உறுதியாகப் பறை என்னும் முழவு வாத்தியத்தைப் பரிசிலாகத் தருவான்
**பாரோர் புகழ**-உலகம் புகழும்படி
**படிந்து**-நாம் நீராடி உயர்வோம்;
**எம்பாவாய்**-எம் பாவைத் தெய்வமே! உன்னை வழிபடுகின்றோம்..
**ஏல்ஓர்**-அசைநிலைகள். ஓசை நிரப்பவந்த அசைச்சொற்கள்

**தொகுப்புரை**

மார்கழி மாதம் நிலாவீசும் விடியற்பொழுதில் நீராட வருபவர்கள் புறப்பட்டு வாருங்கள்!

உயர்ந்த ஆபரணங்கள் பூண்டுள்ள இளம் மகளிரே! வளம் மிக்குள்ள ஆயர்பாடியில் வாழும் செல்வக் குடியிற் பிறந்த சிறுமியரே! கூரிய வேலினையும், பகைவரைத் தாக்கும் கொடுந் தொழிலையும் உடைய நந்தகோபனின் மகனும் மணம்மிக்க மாலைகள் சூடிய யசோதை பிராட்டியின் இளஞ் சிறுவனும் ஆகிய கரிய மேனியையும், சிவந்த அழகிய கண்களையும், ஒளிவிடும் சந்திரன் போன்ற முகத்தினையும் உடைய நாரணனே நமக்கு உறுதியாகப் பறையைப் பரிசிலாகத் தருவான்; உலகம் பாராட்டிப்

புகழும்படி நாம் நீராடி நோன்பு நோற்போம், எம்பாவையே உன்னை வழிபடுகின்றோம்.

**விளக்க உரை**

**பாவை என்பது யாது?**

பாவை என்பது பெண்வடிவம் உடைய சிலையைக் குறிப்பதாகும்.

'பாவை விளக்கு' என்பது பெண் வடிவம் தாங்கிய விளக்கு என்று வழங்குகிறது.

'பாவை' மகளிர்க்கு உவமையாகச் சங்க இலக்கியத்தில் வருகிறது. சிறப்பாகச் சேர நாட்டில் உள்ள கொல்லி மலையில் உள்ள பாவையை உவமிக்கின்றனர்.

**மார்கழித் திங்கள்:** மாதங்களில் சிறந்தது மார்கழி என்பர். இம் மாதத்தில் இப்பாவை நோன்பு மேற்கொள்ளப்படுகிறது என்பது தெரிகிறது.

**திங்கள்:** மாதம்; திங்கள் என்பது மங்கலச் சொல்; அதில் நூல் தொடர்வது சிறப்பு என்பர் அணிநூலார்.

**மதிநிறைந்த நன்னாள்:** இது பவுர்ணமி நாள் என்று கொள்வதற்கும் இடம் தருகிறது; நிலவு ஒளி வீசும் நாள் என்று பொதுவாகக் கொள்வது பொருந்தும்.

**நேர் இழையீர்:** விளி; செல்வ மகளிர் என்பதாம்.

**சிறுமீர்காள்:** இதுவும் விளித்தொடர், இளங்கன்னியர் என்பதாம்.

**செல்வச் சிறுமீர்காள்:** அவ் ஆயர் செல்வச் சிறப்பு உடையவர்கள் என்பது பாடல்கள் முழுவதும் கூறப்படுகிறது.

**கண்ணி:** தலைமாலை என்ற பொருளில் புறநானூற்றில் வருகிறது. 'கண்ணி கார் நறுங் கொன்றை' என்று சிவ

பெருமான் சூடிய மலர் குறிப்பிடப்படுகிறது; அழகிய கண்களை உடையவள் என்றும் பொருள் கூறுவர்.

**ஏர்:** அழகு, மணம் என்ற பொருள்களைத் தரும் சொல்.

**இளஞ்சிங்கம்:** இது உருவகம்; ''சிங்கம் குகையினின்று வெளிப்படுவது போல நீ வருகைதந்து ஆசனத்தில் அமர வேண்டும்'' என்று பின்னர்க் கூறுகின்றார். அவன் வீறு நடைக்குச் சிங்கம் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. அதற்கு முன்னோடியாக இங்கே 'இளஞ்சிங்கம்' எனக் கூறப்பட்டுள்ள நயம் காண்க.

''சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர் பொங்க எப்பாடும் போந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போல'' என்று உவமை கூறப்படுதல்
காண்க.

—திருப்பாவை—23.

**கார்மேனி; செங்கண்**—முரண்தொடை. கருப்பு சிவப்பு என வருவது முரண் அழகு.

**செங்கண்**— அழகிய கண்களைச் 'செவ்வரி பரந்தகண்' என்று கூறுவது கவி மரபு; 'போதரிக் கண்ணினாய்' என்று பின்னும் கூறுதல் காண்க.

**தருவான்**— எதிர் காலம் காட்டும் வினைமுற்று.

**படிந்து**— 'படிவோம்' என்று முற்றுப்பொருளில் பொருள் கொள்க; கால வழுவமைதியும் ஆகும்.

ஏல்ஓர்—அசைச் சொற்கள்; ஓசைநயம் பற்றி வந்தன.

எம்பாவாய்—எம் பாவையே என்பது விளியாகக் கொள்க. ''எம் பாவைத் தெய்வமே! உன்னை வழிபடு

கின்றோம்'' என்று சில சொற்களைப் பெய்து பொருள் கொள்க.

எட்டு அடிகளிலும் முதற்சீர்கள் எதுகை பெற்று வருதல் காண்க; இதனை முற்று எதுகை என்பர். இவ்வாறே ஏனைய பாடல்களும் அமைந்திருத்தல் காண்க.

## 2. வையத்து வாழ்வீர்காள்!

(பாவை நோன்பு)

வையத்து வாழ்வீர்காள் நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ; பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்யுண்ணோம்; பாலுண்ணோம்; நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம்; மலரிட்டு நாம்முடியோம்;
செய்யா தனசெய்யோம்; தீக்குறளை சென்றோதோம்;
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்.

**பதவுரை**

வையத்து வாழ்வீர்காள்—உலக நன்மாந்தரே;
நாமும் நம் பாவைக்கு—நாமும் நம் பாவை நோன்புக்கு
செய்யும் கிரிசைகள்—மேற்கொள்ளும் விரதங்களை
கேளீரோ—கேட்பீராக
பாற்கடலுள்—திருப்பாற்கடலில்
பையத் துயின்ற—யோகத்துயில் மேற்கொண்டுள்ள
பரமன்—பரந்தாமனின்

அடிபாடி—திருவடிகளைப் பாடி; போற்றிப்பாடி.

நெய்யுண்ணோம் பால் உண்ணோம்—நெய், பால் இவற்றைத் தவிர்ப்போம்.

நாட்காலை நீராடி—காலை நாளில் (விடியற்காலையில்) நீராடி

மையிட்டு எழுதோம்—அதன்பின் கண்களுக்கு மை தீட்டி ஒப்பனை செய்துகொள்ள மாட்டோம்.

மலர் இட்டு நாம் முடியோம்— பூச்சூடி புனைவு தேட மாட்டோம்.

செய்யாதன செய்யோம்—சான்றோர்கள் கடிந்து உரைக்கும் தீயசெயல்களை மேற்கொள்ளமாட்டோம்.

தீக்குறளை சென்று ஓதோம்—தீய கோள் சொற்களைப் பிறரிடத்துச் சென்று சொல்லமாட்டோம்.

ஐயமும் பிச்சையும்—தானமும் தருமமும்,

ஆந்தனையும்—இயன்ற அளவு,

கைகாட்டி—தந்து உதவி,

உய்யுமாறு எண்ணி—பிறவித்துயரினின்று உய்யும்வழிகளை நினைத்து அறிந்து.

உகந்து—(செயல்பட்டு) உயர்வோமாக.

ஏல்ஓர்—அசைநிலைகள்.

எம்பாவாய்—எம்பாவையே! உன்னை வழிபடுகின்றோம்;

## தொகுப்புரை

உலக நன்மாந்தரே! நாமும் நம் பாவை நோன்புக்கு மேற்கொள்ளும் விரதங்களைக் கேட்பீராக.

திருப்பாற்கடலில் யோக நித்திரை கொள்ளுகின்ற பரந்தாமனின் திருவடிகளை வணங்கிப் போற்றி நெய், பால் இவற்றை உண்பது தவிர்ப்போம்; விடியற்காலையில் நீராடுவோம், பின் கண்களுக்கு மைதீட்டி ஒப்பனை

செய்துகொள்ள மாட்டோம்; கூந்தலுக்கு மலர் சூடி அழகு சேர்க்க மாட்டோம்; தீய செயல்களைச் செய்யமாட்டோம்; தீய கோள்சொற்களைப் பேச மாட்டோம்.

தானமும், தருமமும் இயன்றவரை செய்து பிறவித் துயரில் இருந்து உய்யும் வழி அறிந்து செயல்பட்டு உயர்வோம்.

**விளக்கவுரை**

கிரிசைகள்—கிரியை என்றால் சடங்கு என்பது பொருளாகும். சடங்குகள் என்பவை விரதங்கள்; கிரிசைகள் கிரியைகள் என்பதன் இலக்கணப்போலி; யகரம் சகரமாகத் திரிந்தது.

பையத் துயின்ற—யோக நித்திரை; விழிப்போடு கூடிய உறக்கம்; அதனால் மென்மையாகத் துயின்று எனக் கூறப் பட்டது:

பைய—மெல்ல.

பரமன்—மேலானவன்.

அடி பாடி—வணங்கிப் போற்றி-திருவடி வணங்குதற்கு உரியது; எனவே வணங்கிப் போற்றி என்று கொள்க.

நெய் உண்ணோம்; பால் உண்ணோம்—விரத நாட்களில் சுவை மிக்க உணவைத் தவிர்ப்பது வழக்கம்; நெய் பால் இவை சுவையும் சத்தும் உள்ள உணவுகள். நெய், பால் என்று கூறியதனால் தயிரும் அடங்கும் என்க.

நாட் காலை—நாளின் பகுதி காலை; விடியல் என்க.

மை தீட்டுதல், மலர் சூடுதல்—ஒப்பனை செய்தலாம்; அவற்றைத் தவிர்ப்பது மனத்தைக் கட்டுப்படுத்தவும், கவர்ச்சி தரும் தோற்றம் தவிர்க்கவும், ஆடவர் மனம் இழுப்பதைத் தவிர்க்கவும் ஆகும்.

தீக்குறளை—தீய குறளை-குறள் நூல் என்று தவறாகக் கருதிவிட வாய்ப்பு உள்ளது; குறளை என்பது சிறு சொற்களால் ஆகிய வாசகம் என்பதாம். அது கோள்சொல் என்க. கோள் சொல்வார் சில சொற்களே பேசி மூட்டி விடுவர்.

ஐயம்—தானம்; பிச்சை—தருமம்; தாமே வலியக்கொடுப்பது தானம். பிறர் கேட்டுத் தருவது பிச்சை.

ஆந்தனை—ஆகும் தனை—ஆகும் அளவு.

கைகாட்டி—கைமடக்குதல் இல்லை என்பதாம்; வாய்ப் பேச்சு பயன் இல்லை என்பதாம்.

உய்யுமாறு—பிறவித்துயரினின்று தப்பும் நெறிகளை அறிந்து.

எண்ணி—பலகாலும் சிந்தித்து.

உகந்து—உயர்வு அடைவோம். (முற்றுப்பொருளில் பொருள் கொள்க)

உகப்பு—உயர்வு என்ற பொருள் உடையது.

உவப்பு—மகிழ்ச்சி; உகப்பு—உயர்வு. வேறுபாடு காண்க.

## 3. ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி

(நோன்பின் பயன்)

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந் நெலூடுகயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

**பதவுரை**

ஓங்கி உலகளந்த உத்தமன்—பேருரு எடுத்து உலகினை அளந்த உத்தமன்
பேர்பாடி—புகழைப் பாடி
நாங்கள் நம் பாவைக்கு-நாம் நம் பாவைத்தெய்வத்துக்கு
சாற்றி—நம் வழிபாட்டைக்கூறி
நீராடினால்—நீராடுவதால்
தீங்குஇன்றி—கெடுதல் இல்லாமல்
நாடு எல்லாம்—நாடு முழுவதும்
திங்கள் மும்மாரி பெய்து—மாதந்தோறும் மூன்று மழை பெய்து அதனால்.
ஓங்கு பெருஞ்செந்நெல்—ஓங்கிய, மிக்க செந்நெற் பயிர் விளைய
ஊடு கயல்புரள—அவற்றின் இடையே கயல்மீன்கள் பிறழவும்,
பூங்குவளைப் போதில்—குவளை மலரில்
பொறி வண்டு—புள்ளிகளை உடைய வண்டுகள்
கண்படுப்ப—தேன் உண்டு மகிழ்ந்து துயிலவும்
தேங்காதே—தயங்காது
புக்குஇருந்து—(கறக்கப்) புகுந்து
சீர்த்த முலைபற்றி—பெருத்த மடியினைப்பற்றி
வாங்க—வளைக்க; இழுக்க
குடம் நிறைக்கும்—பாற்குடங்களை நிரப்பும்
வள்ளல் பெரும் பசுக்கள்—வளமான பெரிய பசுக்களும்.
நீங்காத செல்வம்—நீங்காத பெருஞ்செல்வமும்,
நிறைந்து—நிறைவோம்
எம்பாவாய்—பாவைத் தெய்வமே உன்னை வழிபடுகின்றோம்

### தொகுப்புரை

உலகு அளந்த பெருமான் புகழைப்பாடி நாம் நம் பாவைத் தெய்வத்துக்கு நம் வழிபாட்டைக் கூறி நீராடுவ தால் விளையும் நன்மைகள் இவை; நாடு முழுவதும், மாதந்தோறும் மூன்று முறை மழை பெய்யும்; அதனால் செந்நெல் மிக்கு விளையும்; அவற்றின் இடையே கயல் மீன்கள் பிறழும்; குவளை மலரில் வண்டுகள் கண் துயிலும்; பசுக்கள் பாற்குடங்களை நிரப்பும், வளம்மிக்க பெரிய பசுக்களும் நீங்காத பெருஞ் செல்வமும் நிறைந்து நன்மை பெருகும்.

### விளக்கவுரை

ஓங்கி உலகளந்த உத்தமன்—உலகளந்த பெருமான், மாவலியிடம் மண்கேட்டு வந்த பெருமான் ஓங்கிப் பேருருவம் எடுத்தார். வாமன அவதாரத்தில் நடந்த நிகழ்ச்சி இது. அது நன்மைக்காகச் செய்த செயல் என்பதால் ‘உத்தமன்’ என்றார்; இறைவன் எங்கும் நிறைந்தவர் என்பது உட் கருத்தாகும்.

பாவைக்குச் சாற்றி—பாவையை வழிபட்டு; பாவைத் தெய்வத்தை மனத்தில் நிறுத்திக்கொண்டு.

கருத்துரை: மழை பெய்வதால் செந்நெல் விளையும்; நீர் மிக்கு இருப்பதால் கயல் பிறழுகின்றது; குவளை மலர்களில் வண்டு தேன் உண்டு அங்கேயே படுத்து உறங்கிவிடு கின்றது; பசுக்கள் மேய்ச்சல் நன்கு பெறுகிறது; அதனால் இடையர்கள் கறக்கும்தோறும் குடம் குடமாகப் பாலைத் தருகின்றன. அத்தகைய பெரும் பசுக்களும், நிலைத்த செல் வமும் பெருகும்.

இவை அனைத்தும் மழையின் விளைவு ஆகும்; எனவே பாவையை வழிபட்டுப் பின் நீராடுக. அதற்குமுன் உத்த மனைப் பாடுக என்பதாம்.

புக்கு—புகுந்து, பகுதி இரட்டித்து இறந்த காலம் காட்டியது.

நிறைந்து—நிறைவோம் என முற்றுப் பொருளில் பொருள் கொள்க.

கால வழுவமைதியும் ஆகும்.

## 4. ஆழிமழைக் கண்ணா

(மேகத்தை வேண்டுதல்)

*ஆழிமழைக் கண்ணா! ஒன்றும்நீ கைகரவேல்;*
*ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி,*
*ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்*
*பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்*
*ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து,*
*தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்,*
*வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்*
*மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.*

**பதவுரை**

ஆழிமழைக் கண்ணா—கடலில் தோன்றும் மழையாகிய தெய்வமே!

நீ ஒன்றும் கைகரவேல்—நீ சிறிதும் எங்கள் வேண்டுகோளை மறுக்காதே

ஆழியுள் புக்கு—கடலில் புகுந்து

முகந்துகொடு—முகந்துகொண்டு

ஆர்த்து ஏறி—ஆரவாரித்து மேலே சென்று

ஊழிமுதல்வன் உருவம் போல் - ஊழிக் காலத்து முதற் பொருள் ஆகிய நாரணன் உருவத்தைப் போல.

மெய்கறுத்து-வடிவு கறுத்து

பாழியம் தோள் உடை-வலிமைமிக்க தோள்களை உடைய
பற்பநாபன்-பத்மநாபன்-நாபிக் கமலத்தை உடையவன்
கையில் ஆழிபோல் மின்னி- கைச்சக்கரம் என ஒளிவிட்டு
வலம்புரிபோல் நின்றதிர்ந்து. அவன் வலம்புரிச் சங்குபோல் நிலைத்து ஒலித்து (இடித்து)
தாழாதே-தொடர்ந்து
சார்ங்கம் உதைத்த சரமழைபோல்-திருமாலின் வில் வெளிப்படுத்தும் அம்புகளின் தொகுதியைப்போல.
உலகினில் வாழப் பெய்திடாய்-உலகத்தவர் வாழ நீ பெய்யச் செய்வாயாக;
நாங்களும் மார்கழி நீராட-நாங்களும் இம் மார்கழிமாதத்தில் நீராடுவதற்கு
மகிழ்ந்து-மகிழ்ச்சி அடைவோம்.

## தொகுப்புரை

கடலில் தோன்றும் மேகமே நீ சிறிதும் மறுக்காதே.

மழையைப் பெய்விப்பாயாக! கடலுள் புகுந்து நீரை முகந்து கொண்டு வந்து, பேரொலீ செய்து, உலகளந்த பெருமானைப் போல வடிவு கறுத்து, அவன் கைச்சக்கரம் போல் மின்னி ஒளிசெய்து, வலம்புரிபோல் இடித்துத் தொடர்ந்து அம்பு மழைபோல மழைநீரைப் பொழிவிக்க அருள் செய்வாய்.

## விளக்கவுரை

ஆழிமழைக்கண்ணா-மழையைக் கண்ணன் என்று கூறியது அதைத் தெய்வமாக மதித்ததால் என்க.
ஒன்றும்-சிறிதும்
கொடு-கொண்டு என்பதன் இடைக்குறை.

கைகரவேல்-கையை ஒளிக்காதே
ஊழிமுதல்வன்-ஊழிக்காலத்து முடிவில் பிரளயம் எழும்; அப்பொழுது கடல் கிளர்ந்து எழுதல் உண்டு; இறைவன் யாதும் எல்லாமுமாகி நின்ற நிலையில் பிரளயமாகக் கறுத்து இருப்பான் என்க. மேகம் மூண்டு எழும்போது கறுத்து இருக்கும்.

பாழி—வலிமை; அம்—சாரியை

பற்பநாபன்—இது பத்மநாபன் என வழங்குதல் காண்க; தாமரை மலரை நாபியாக (கொப்பூழாக) உடைய வன். அதில் பிரமன் பிறந்தான் என்பர்; அவன் கமலத்தோன் எனப்படுகிறான். பதுமம்-தாமரை த் ற் ஆகியது.
தாழாதே—தாழாமல்

சாரங்கம்-திருமாலின் கையில் உள்ள வில்லுக்கு இப்பெயர் வழங்குகிறது. அதனால் அவனைச் சாரங்கபாணி என்பர்.
நீராட மகிழ்ந்து — நீராடுவதற்கு மகிழ்வோம்; மகிழ்ந்து எனக் கூறியது கால வழுவமைதி;
ஆழி—இரு பொருளில் ஆளுதல் நயம் காண்க.

## 5. மாயனை

(இறை வழிபாடு)

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போயபிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்

**பதவுரை**

மாயனை—மாயம் வல்லவனை

மன்னும் வடமதுரை மைந்தனை-
நிலைபெற்ற வடமதுரையில் பிறந்த மகனை

தூய பெருநீர் யமுனைத்துறைவனை-
யமுனைத் துறையில் ஆடிப் பாடி மகிழ்ந்து திரிந்தவனை

ஆயர் குலத்தில் தோன்றும் அணி விளக்கை—
ஆயர் குலத்தில் தோன்றிய அழகிய ஒளி விளக்கினை

(ஆயர்குலம் சிறப்பு நிலை அடைந்தவாறு கூறியது)

தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை—
தேவகிக்கு அவனைப் பெற்றதால்
பெருமை சேர்த்துத் தந்த பெருமானை.

தூயோமாய் வந்து—குளித்து நீராடித் தூயவர்களாய் வந்து,

தூமலர்த் தூவித்தொழுது — தூய மலரிட்டு வணங்கி

வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க-வாயினால் பாடி
மனத்தால் தியானிக்க

போய பிழையும்-கடந்த காலப் பிழைகளும்,

புகுதருவான் நின்றனவும்—இனிச் செய்யக் கூடிய தவறுகளும்,

தீயினில் தூசு ஆகும்—தீயில் இட்ட தூசாக மறைந்து விடும்;

செப்பு—அவன் புகழைப் பாடுக.

**தொகுப்புரை**

மாயம் வல்லவன், வட மதுரையில் பிறந்தவன்; யமுனைத் துறையில் ஆயர் பாடியில் வளர்ந்தவன்; ஆயர்

குலத்தின் ஒளி விளக்காகத் திகழ்பவன்; தேவகிக்கு அவள் வயிற்றில் பிறந்ததால் பெருமை தந்தவன்; அவனை நீராடித் தூயவர்களாக வந்து வாயினால் பாடியும், மனத்தினால் சிந்தித்தும் வழிபட்டால் செய்த பாவங்களும், செய்ய இருக்கும் தவறுகளும் அணுகா; அவை தீயினில் இட்ட தூசு ஆகிவிடும்; அதனால் அவன் புகழைப் பாடு வாயாக.

**விளக்கவுரை**

மாயன் : 'இவன் ஆயன் அல்லன் மாயன்' என்பார் பெரியாழ்வார். மாயம் வல்லவன்; எதையும் சூழ்ந்து செயலாற்றுபவன்; அவன் செயல் பிறர்க்கு எளிதில் விளங்காது என்பதாம்.

**வடமதுரைமைந்தன் :**

அவன் பிறந்த ஊர் இது என்று கூறியது. மைந்து—வலிமை என்ற பொருள் தரும் சொல்; மைந்தன்—மகன்.

யமுனைத்துறைவன் — பசுக்களை மேய்த்துச் சென்று ஆயர் மகளிரோடு திரிந்து ஆடிய இடம்; பல அசுரர் களைக் கொன்ற இடம் அது; வளர்ந்த இடம் என்பதாம்.

**ஆயர் குலத்தில் தோன்றும் அணி விளக்கு :**

இடையர் குலத்தில் அவன் அறிவு நிறைந்தவனாக விளங்கினான் என்பதாம். மற்றவர்க்கு ஒளி தந்தான் என்பதாம்.

குடல் விளக்கம் செய்தல்—அவனைப் பெற்ற வயிறு பெருமை பெற்றது என்பதாம்.

> ''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோன் எனக்கேட்ட தாய்''—குறள்.

மனம் வாக்கு காயம்; திரிகரணசுத்தி வேண்டும் எள்பர். அதையே இங்குக் கூறினார் என்க.

செயல் தொழுது-காயம்

பாடி—வாக்கு

சிந்தித்து—மனம்

தாமோதரன்—தாமம்-கயிறு; உதரன்-வயிற்றில் கட்டப் பட்டவன்: அதனால் தாமோதரன் எனப்பட்டான்.

புகுதருவான் நின்றனவும்-பின்பு செய்யாமல் தடுப்பான் என்பதாகும்.

கடந்த காலத்தவறுகளை மன்னிப்பான்; புதிய தவறுகள் செய்யாமல் தடுப்பான் என்பதாம்.

## 6. புள்ளும் சிலம்பினகாண்

(பல்வகை ஒலிகள்)

*புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயில்*
*வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?*
*பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு*
*கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சி,*
*வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை*
*உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்*
*மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்*
*உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.*

**பதவுரை**

புள்ளும்—பறவைகளும்

சிலம்பினகாண்—மாறி மாறி ஒலித்தன

புள் அரையன் கோயில்—கருடனுக்கு அரசனாகிய திருமாலின் திருக்கோயிலில்

வெள்ளை விளிசங்கின்—வெள்ளை நிறத்து ஊதி அழைக்கும் சங்குகளின்

பேரரவம் கேட்டிலையோ-பேரொலி கேட்கவில்லையோ
பிள்ளாய் எழுந்திராய்-பெண் பிள்ளையே எழுந்து வருக
பேய்முலை நஞ்சுண்டு-பூதகியின் பாலை உண்டு
கள்ளச் சகடம்-சூழ்ச்சி மிக்க சகடாசுரன்
கலக்கு அழிய-கலங்கி அழிய
கால் ஒச்சி-காலால் உதைத்து

வெள்ளத்து அரவில் துயில் அமர்ந்தவித்தினை-பாற்கடலில் ஆதிடேசன் மீது துயில் கொள்ளும் மூலப் பொருளை
முனிவர்களும் யோகிகளும்-முனிவர்களும் யோகியர்களும்
உள்ளத்துக் கொண்டு— மனத்தில் தியானித்துக் கொண்டு
மெள்ள எழுந்து-மெல்லத் துயில் எழுந்து
அரி என்ற பேரரவம்-அரி அரி என்று அழைக்கும் பேரொலி
உள்ளம் புகுந்து-நம் உள்ளத்தூடு புகுந்து
குளிர்ந்து-அதனால் மனம் குளிர்வோம்.

**தொகுப்புரை**

பறவைகளும் விழித்து எழுந்து மாறி மாறி ஒலிக்கின்றன; கருடனுக்கு அரசனான பெருமானின் திருக் கோயிலில் வெண் சங்கு விளித்து அழைக்கிறது. அதனைப் பெண் பிள்ளையே கேட்டிலையோ! பூதகியின் முலைப்பால் உண்டு அவளைச் சாய்த்தவனும், வஞ்சனைமிக்க சகடாசுரனை உதைத்துச் சாய்த்தவனும்ஆகிய பரந்தாமன் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ளான். அம் மூலப் பொருளை உள்ளத்தில் கொண்டு முனிவர்களும் யோகிகளும் அவன் நாமம் சொல்லி அழைக்க அது நம் உள்ளத்தைக் குளிர்வித்து மகிழ்ச்சி கொள்ளச் செய்யும்; நீ துயில் எழுக.

**விளக்கவுரை**

புள்ளும் என்பது, வானம் வெளுத்துவிட்டது; அதோடு பறவைகளும் என்று கூறியது, இறந்தது தழுவிய எச்ச

உம்மை; உயிர்களும் மற்றவர்களும் எழுந்து தத்தம் தொழி லில் ஈடுபடுகின்றனர் என்பதாம்.

சிலம்புதல்—இரட்டிப்பொலி எழுப்புதல்; மாறி மாறி ஒலித்தல்.

புள்—பறவை; இங்குக் கருடனைக் குறித்தது.

அரையன்—அரசன் என்பது திரிந்து அரையன் என ஆயிற்று; சகரத்துக்கு யகரம் போலி.

சங்கு முழங்குவது—மற்றவர்களை விளிக்க; அதனால் விளிசங்கு எனப்பட்டது.

பிள்ளாய்— பிள்ளை-ஐ ஆய் எனத் திரிந்தது, பெண் மகளைக் குறித்தது, விளித்தொடர்.

பேய்முலை நஞ்சு உண்டு—முலை தர வந்தவள் நஞ்சு தாங்கி இருந்தாள் என்பதாம். தாயுருவில் வந்தாலும் அவள் பேய் என்பதனைச் சுட்டிக் காட்டுகிறார்.

சகடம்—வண்டி; சகடாசுரன்;

கலக்கு அழிய—கலக்கத்தினை உண்டு பண்ணி.

வித்து— விதை போன்றவன், மூலப்பொருளை உணர்த் தியது.

மெள்ள— மெல்ல என்பது எதுகை நோக்கித் திரிந்தது.

குளிர்ந்து— மனம், மகிழ்வோம், காலவழுவமைதி.

புள்— இருமுறை வந்தது; சொற்பொருள் பின்வரு நிலையணி என்க. இருமுறையும் பறவை என்ற பொருளி லேயே வந்துள்ளது.

## 7. கீசுகீ சென்றெங்கும்

(கதவைத் திறக்க எனல்)

*கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து*
*பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்*
*பெண்ணே!*
*காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து*
*வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்*
*ஓசை படுத்தத்தயிராவம் கேட்டிலையோ?*
*நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி*
*கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?*
*தேச முடையாய்! திறவேலோ ரெம்பாவாய்.*

**பதவுரை**

கீசு கீசு என்று—கீச்கீச் என்று
ஆனைச்சாத்தன்— வலியான் என்னும் கரிக்குருவி

கலந்து பேசின பேச்சரவும்— தம்முள் மகிழ்ந்து உரையாடும் பேச்சொலி

கேட்டிலையோ— காதில் விழவில்லையா
பேய்ப் பெண்ணே— மந்தமானவளே

காசும் பிறப்பும் கலகலப்ப— காசு பிறப்பு என்ற தாலி வகைகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டு கலகலப்பு ஒலி செய்ய

கைபேர்த்து—கைபெயர்த்து (முன்னுக்குப்பின் மத்தினை இழுத்து)

வாச நறுங்குழல் ஆய்ச்சியர்— இடைப் பெண்கள்
மத்தினால் ஓசைப்படுத்த—மத்துக்கொண்டு ஓசை உண்டாக்க

தயிர் அரவம் கேட்டிலையோ— தயிர்கடையும் மத்தொலி கேட்கவில்லையோ

நாயகப் பெண் பிள்ளாய்—மகளிர் திலகமே!

நாராயணன் மூர்த்தி கேசவனை— இறைவன் திருப் பெயர்கள்

பாடவும் நீ கேட்டே கிடத்தியோ— பாடவும் நீ கேட்டுக் கொண்டே படுத்து உறங்குகிறாய், (அவ்வாறு எப்படி உன்னால் உறங்க முடிகிறது?)

தேசம் உடையாய்— ஒளி படைத்தவளே!

திறவு— கதவைத் திறப்பாயாக;

ஏல்ஓர்—அசைச் சொற்கள்

எம்பாவாய்—எம்பாவையே (வழிபடுகிறோம்; அருள்கூட்டுக)

## தொகுப்புரை

வலியான் என்னும் கரிக்குருவி 'கீசுகீசு' என்று தமக்குள் பேசிக் கொள்ளும் ஒலி காதில் விழவில்லையா, மந்தமான பெண்ணே! காசும் பிறப்பும் கலகலப்ப ஒலிக்கவும், கை பெயர்த்து ஆய்ச்சியர் மத்தினால் கடைந்த ஓசை உண்டாக்க வும் அவ்வொலி கேட்டிலையோ, மகளிர் திலகமே! நாராயண னைப் பாடவும் நீ கேட்டுக்கொண்டே படுக்கையில் கிடக் கிறாயே! ஒளி உடையவளே கதவைத் திறப்பாயாக.

## விளக்கவுரை

கீசுகீசு— ஒலிக்குறிப்பு; இரட்டைக்கிளவி

ஆனைச்சாத்தன்— கரிக் குருவியைக் குறிப்பது

பேய்ப்பெண்ணே என்றது— பேயறைந்தது போல் தூங்கிக் கிடப்பதால் தெய்வத் தன்மைக்கு மாறுபட்டது பேய்த் தன்மை; எதையும் காதில் வாங்கிக் கொள்ளாத மந்தமான நிலை;

அவன் இயல்பானநிலை அவள் சிறப்புமிக்கவள் என்பது; பெண்களின் நாயகி (தலைவி) யாக இருக்கக் கூடிய தகுதி படைத்தவள், மகளிர் திலகம் என்பது அதற்கு இணையான தொடர் எனலாம்; மறுபடியும் அவளைத் 'தேசம் உடையாய்' என்று விளிக்கிறார். அவசரப்பட்டுப் 'பேய்ப் பெண்ணே' என்று அழைத்து விட்டாள்; அவளைச் சமாதானப்படுத்தும் முறையில் ''நாயகப் பெண் பிள்ளாய்'' எனவும், ''தேசம் உடையாய்'' எனவும் விளித்து உயர்த்துகிறாள்.

வாச நறுக்குழல் ஆய்ச்சியர்— பூச்சூடிய கூந்தல் உடையவர் என்பதாம்.

காசு பிறப்பு— இவை மகளிர் தாலிச் சரட்டில் கோத்துக் கொண்டுள்ள தாலி வகைகளைக் குறிப்பதாகும். யாப்பு இயலில் சீர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது தேமா புளிமா, இவற்றைக் காசு, பிறப்பு என்று குறிப்பிடுவர்; அவற்றின் சொற்பொருள் திருப்பாவைப் பாடலால் விளங்குகிறது.

காசு பிறப்பு என்பவை பெரிதும் சிறிதுமாக அடுத்து அடுத்துக் கோக்கப்பட்ட பொன்தாலிகள் எனத் தெரிகிறது பிறப்பு என்பதால் அது ''குட்டித்தாலி''; சிறியது என்பது பொருளாம். பொன்னால் செய்த தாலி, 'காசு காலை' என்ற தொடர் காண்க.

தயிர் ஒலியோடு மங்கலத்தாலி ஒலியும் சேர்ந்து இசைத்தல் கூறப்படுகிறது.

தயிர் ஒலி— கரகரப்புடையது; பேரொலி;
தாலி ஒலி— இனிமை உடையது; மெல்லொலி;

கேசவனைப் பாடவும் நீ கேட்டுவிட்டு எப்படி உறங்கு கிறாய் அது உன்னை அழைக்கும் ஒலியல்லவா என்பது கருத்து. கோயிலில் குழுமி உள்ளவர்கள் பக்திப்பரவசத்தால் பாடி அழைப்பது இது.

இப்பாடல் ஒலிகளை மட்டும் குறிப்பிடுவதாக அமைவது தனிச்சிறப்பு ஆகும். கரிக்குருவியின் பேச்சொலி, தயிர்கடையும் வீச்சொலி, பக்தர்களின் பாட்டொலி இவை பள்ளி எழுச்சி ஒலிகளாக அமைந்துள்ளன.

## 8: கீழ்வானம் வெளுத்தது

(இறையருள்)

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல்
காத்துன்னைக்
கூவுவான் வந்து நின்றோம்; கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மா வாய்பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்

**பதவுரை**

கீழ்வானம் வெள்ளென்று-கிழக்கு வானம் வெளுத்து விட்டது என்று

எருமை சிறுவீடு-எருமைகள், சிறிது விடுதலை பெற்றுக் காலார நடந்து

மேய்வான் பரந்தனகாண்-மேய்வதற்குப் பரவிச் சென்றுள்ளன.

மிக்கு உள்ள பிள்ளைகளும்-போகாமல் எஞ்சி உள்ள சிறுமியரும்

போவான்போகின்றாரை-போவதற்காகப் புறப்படுகின்றவர்களையும்

போகாமல் காத்து-போகாமல் தடுத்து நிறுத்தி

உன்னைக் கூவுவான் வந்து நின்றோம்-உன்னை அழைக்க வந்துநின்றோம்.

கோதுகலமுடைய பாவாய்- குதூகலம் மிக்க பெண்ணே!

எழுந்திராய்-துயில் எழுக

பாடிப்பறை கொண்டு-கண்ணனைப் பாடிப் பரிசில் பெற்று

மாவாய் பிளந்தானை-மாவினது (குதிரையினது) வாயைப் பிளந்தவனை.

மல்லரை மாட்டிய-மற்போர் செய்யும் வீரர்களை மாளச் செய்த

தேவ ஆதிதேவனை-தேவர்களுக்கு முதற்கடவுளாக விளங்கும் நாரணனை.

சென்று நாம் சேவித்தால்-சென்று நாம் வணங்கினால்

ஆவா என்று ஆராய்ந்து-உண்டாகும் நன்மைகளை ஆகா என்று ஆராய்ந்து

அருள்-யாம் சொல்வதைக் கேட்டு அருள்க.

## தொகுப்புரை

கிழக்கு வானம் வெளுத்துவிட்டது. எருமைகள் சிறிது நேரம் விடுதலை பெற்று மேய்வதற்குப் பரவிச் செல்கின்றன. போகாமல் எஞ்சி உள்ள சிறுமியர்களும் போவதற்காகப் புறப்படுகின்றனர்; அவர்களைப் போகாமல் தடுத்து நிறுத்தி யுள்ளோம்; கேசிகன் என்னும் குதிரை வடிவில் வந்த அரக்கனை வாய்பிளந்து வென்றவனை, மல்லர்களை மாளச்செய்த மாவீரனை, தேவர்களுக்கு எல்லாம் ஆதி நாயகனைச் சென்று நாம் வணங்கினால், நன்மைகள் உண்டாகும்; ''ஆகா இது ஏற்கத்தகும்'' என்று நீ முடிவு செய்து அருள்க.

## விளக்கவுரை

கீழ்வானம்-கிழக்கே சூரியன் உதிப்பதால் வெளுத்தது என்க.

சிறுவீடு-சிறிதுவிடுதலை பெற்று.

மேய்வான்-வினையெச்சம்; மேய;

பரந்தனகாண்-பரவிச் சென்று பால் கறப்பதற்கு முன்
அவை கால்ஆறுவதற்காக வெளியே அவிழ்த்து
விடுதல் வழக்கம் என்று தெரிகிறது;

போவான்-வான் ஈற்று வினையெச்சம்: போக.

போகின்றார்-வினையாலணையும் பெயர்.

காத்து-தடுத்து.

கூவுவான்-கூவ என்னும் பொருள்தரும் வான் ஈற்று வாய்பாட்டு வினையெச்சம்.

கோதுகலம்-குதூகலம் என்ற வட சொல்லின் தமிழ் ஆக்கம்.

பறை-இங்குப் பரிசில் என்ற பொருளில் வந்தது. பெறுகின்ற பரிசு பறையாகிறது.

மா வாய்பிளந்தவன்-மாவினது வாய்; கேசிகன் என்ற அரக்கன் குதிரை வடிவில் வந்து கண்ணனை மோத வந்தான். அவனைக் கொன்று முடித்தான் என்பதாம்.

மல்லர்-மற்போர் செய்வோர். மோதுபோர் செய்பவர்; துரியன் சபையில் நிகழ்ந்த நிகழ்ச்சி.

மாட்டிய-மாளச் செய்த;

ஆவா-ஆகா வியப்பிடைச்சொல்.

அருள்-செய்து அருள்க.

இவ்வளவும் கூறிவிட்டோம்; இனி நீ எது தக்கது என்பதை ஆராய்து கொள்க என்பதாம்.

## 9. தூ மணி மாடத்து

(நாமம் நவில்வோம் எனல்)

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்

மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ? உன் மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ!
மாமாயன் மாதவன், வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

**பதவுரை**

தூமணி மாடத்து-தூய மணிகள் நிறைந்த மாளிகையில்
சுற்றும் விளக்கு எரிய-சுற்றிலும் விளக்கு ஒளிவிட
தூபம் கமழ-சந்தனம் அகில் முதலியவற்றின் புகை கமழ
துயில் அணைமேல்-பஞ்சணைமீது
கண்வளரும்-துயில் கொள்ளும்
மாமான் மகளே-மாமன் மகளே!
மணிக்கதவம் தாள் திறவாய்-மணிகள் பொருந்திய
கதவின் தாள்பாளைத் திறப்பாய்.
மாமீர்-மாமி!
அவளை எழுப்பீரோ-அவளை எழுப்ப மாட்டீரோ
உன் மகள்தான் ஊமையோ செவிடோ அனந்தலோ-
உன் மகள் என்ன ஊமையோ, செவிடோ, சோம்பல்
உடையவளா
ஏமப்பெருந்துயில்-நிம்மதியான பெருந்தூக்கம் ஆகிய
மந்திரம்-மயக்கத்தில்
பட்டாளோ-அகப்பட்டு விட்டாளோ
மாமாயன், மாதவன், வைகுந்தன் என்று என்று-இறைவன்
திருநாமங்கள் இவற்றைக் கொண்டு பலகாலும் விளித்து
நவின்று-நாவினால் சொல்லி நற்பயன் அடைவோமாக

## தொகுப்புரை

தூயமணி மாடத்தில் ஏற்றிய தூப விளக்கு ஒளியிட மணம்கமழும் துயில் அணைமேல் துயில்கொள்ளும் மாமன் மகளே! அழகிய கதவின் தாளைத் திறப்பாய். மாமி! அவளை எழுப்ப மாட்டீரோ! உன் மகள் என்ன ஊமையோ செவிடோ, சோம்பல் உடையவளோ, நிம்மதியான தூக்க மயக்கத்தில் கிடக்கிறாளே. அவளை எழுப்புங்கள். மாயன் மாதவன் வைகுந்தன் என்று அவன் பல பெயர்களைப் பலகாலும் சொல்லிப் பயன்பெறுவோமாக.

## விளக்கவுரை

தூமணி—தூயமணி என்பதன் மரூஉ முடிவு:

மாமான் மகளே-மாமன் மகளே; உறவு பற்றிஅழைத்தது;

மாமி அவளை எழுப்பீரோ—முதற்கள் மகளை நேரிடையாக எழுப்பிப் பார்க்கிறாள். அவள் எழுவதாக இல்லை. அதனால் அவள் தாயை விளித்து மகளை எழுப்பீரோ என்று கூறுகிறாள்,

வாய் திறந்து பதில் பேசாததால் ஊமை என்றும், என்ன ஏது என்று கேட்டு எழாததால் செவிடு என்றும், அவள் நிச்சயமாகச் செவிடுமல்லள் ஊமையுமல்லள் எழுவதற்குச் சோம்பல்தான் காரணம் என்ற முடிவுக்கு வருகிறாள். அதனால் அனந்தலோ என்றும் கேட்கிறாள்.

துயிலை மந்திரம் என்று கூறியது அந்த மயக்கத்தில் இருந்து விடுபடாததால்.

நாமம்—பெயர்; ஆயிரம் பெயர்கள் உடையவன் திருமால்.
நவின்று—கூறிப் பயன் அடைவோம் என்று முடிக்க.

தூமணி மாடம், சுற்றும் விளக்கு, மணம் கமழும் பஞ்சணை-இவை செல்வ வாழ்க்கையை விவரிக்க வந்தன.

## 10. நோற்றுச் சுவர்க்கம்

(கதவு திறக்க)

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டு ஒருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகருணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில் தான் தந்தானோ?
ஆற்ற அனந்தலுடையாய்: அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்.

**பதவுரை**

நோற்று-சென்ற பிறவியில் நோன்புகள் செய்து

சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்-அதன் பயனாய் இந்தப் பிறவியில் சுவர்க்க சுகம் பெறும் அம்மையே!

மாற்றமும் தாராரோ-பதில் யாரும் கூறமாட்டீர்களோ?

வாசல் திறவாதார்-வாசற் கதவையும் திறக்கமாட்டீர்.

நாற்றத் துழாய் முடி —மணம் வீசும் துளப மாலையை முடியில் சூடிய

நாராயணன் நம்மால் போற்ற- நாராயணன் நம்மால் துதிக்கப் பெற

பறைதரும்-பரிசு தருவான்;

புண்ணியன் (ஆல்)-நன்மை செய்பவன் ஆவான்;

பண்டு ஒருநாள்-இராமவதாரத்தில்

கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகருணனும்—எமன் வாயில் விழுந்த கும்பகருணனும்

தோற்றும்—போர்க் களத்தில் தோல்வியுற்ற போதும்

உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ உன்னிடமே அவனுக்குரிய பெரிய உறக்கத்தைத் தந்துவிட்டானோ?

ஆற்ற அனந்தல் உடையாய்—மிக்க சோம்பல் உடையவளே!

அருங்கலமே—அரிய அணிகலன் போன்றவளே.

தேற்றமாய் வந்து திற—தெளிவாகத் துயில் விட்டு எழுந்து வந்து கதவைத் திறப்பாயாக.

**தொகுப்புரை**

நோற்றதன் பயனாகச் சுவர்க்க சுகத்தை அனுபவித்து வரும் செல்வ மகளே! பதிலும் பேச மாட்டீர்; வாசலும் திறக்க மாட்டீர்; நாராயணன் போற்றப் பறை தருவான். தோற்றும் கும்பகருணனின் தூக்கத்தை உனக்குத் தந்து விட்டான். மிக்க சோம்பல் உடையவளே! செல்வ மகளே! துயில் நீங்கித் தெளிவாக வந்து கதவைத் திறப்பாயாக.

**விளக்கவுரை**

**நோற்றுச் சுவர்க்கம்புகுகின்ற அம்மனாய்**

இந்த இப்பிறவியில் செல்வமும், சுகமும் அமைய வேண்டுமானால், சென்ற பிறவியில் அதற்கு ஏற்ற தவத்தைச் செய்திருக்க வேண்டும் என்ற நம்பிக்கை இருந்தது. அதைத் தெரிவிப்பது இந்தக் கருத்து.

அம்மனாய்—விளித் தொடர்

அம்மை என்ற பொருளில் அம்மன் என்பது வழக்கில் இருக்கிறது. கோயிலில் இருக்கும் தெய்வத்தை மட்டும் 'அம்மன்' என்று வழங்குகின்றனர். அஃது ஐ விகுதி பெற்று அம்மனை என வழங்கி உள்ளது. அம்மானை என்ற சொல்லும் காண்க.

தோற்றும் தந்தான்

தோற்றும் அவன் கொடை வள்ளலாக இருக்கிறான் என்ற பொருள் நயம் காண்க. அனைத்தையும் அவன் தோற்ற போதும் தூக்கத்தை மட்டும் அவன் இழக்கவில்லை. அதை உன்னிடம் தந்துவிட்டுச் சென்று இருக்கிறான் என்ற நயம் காண்க.

உனக்கே—என்பதால் முழுத்தூக்கமும் உன்னிடம் தந்து விட்டான்; வேறு யாருக்கும் தரவில்லை; ஏகாரம் பிரிநிலை.

தந்தானோ—ஓகாரம் வியப்பிடைச் சொல்.

கும்பகருணன் சாகவில்லை; அவன் உன்வடிவில் வாழ் கிறான் என்ற கருத்து அமைந்திருத்தல் காண்க. 'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்பர், அதுபோல அவன் தந்தான் என்ற நயமும் காண்க.

## 11. கற்றுக் கறவை

(விழித்து எழுக)

கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்
குற்ற மொன்றில்லாத கோவலர்தம் பொற்
கொடியே!
புற்றரவல்குல் புனமயிலே! போதராய்!
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்து நின்
முற்றம்புகுந்து முகில்வண்ணன் பேர் பாட
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி! நீ
எற்றுக்குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்.

## பதவுரை

கற்றுக் கறவை—கன்று உடைய கறவைப் பசு

கணங்கள்—கூட்டங்கள்

பல கறந்து—பலவற்றைக் கறந்து

செற்றார் திறல் அழிய—பகைவர் வலிமை கெடும்படி

செருச் செய்யும் கோவலர் தம் பொற்கொடியே—போர் செய்யும் இடையர் மகளே!

புற்று அரவு அல்குல் புனமயிலே — பாம்பின் படம் போன்ற வடிவு உடைய அல்குலை உடைய காட்டு மயில் போன்றவளே.

போதராய்—எழுந்து வருக; (போதல் தருக என்பதன் சிதைந்த வடிவு.)

சுற்றத்துத் தோழிமார் எல்லாரும்—சுற்றமாகப் பழகும் தோழியர் எல்லாரும்

வந்து நின் முற்றம் புகுந்து—வந்து உன் வீட்டு முன் பகுதியில் வந்து கூடி,

முகில் வண்ணன் பேர் பாட—கண்ணனைப் போற்றிப் பாட

சிற்றாதே—அசையாமல்

பேசாதே—பேசாமல்

செல்வப் பெண்டாட்டி—செல்வ மகளே!

நீ எற்றுக்கு உறங்கும் பொருள்—நீ எதற்காக உறங்குகிறாய்; அதன் பொருள் யாது?

## தொகுப்புரை

கன்றுகளுடன் கூடிய பசுக்களைப் பால் கறந்து வாழும் வாழ்க்கையும், பகைவர்களை அழித்துப் போர் செய்யும் வீரச் செயலும், மற்றும் குற்றம் ஏதும் இல்லாத வாழ்வும்

உடைய இடையர்தம் மகளே! மயில் போன்ற சாயல் உடையவளே! புறப்பட்டு வருக.

''உன் சுற்றமாக இருந்து வரும் தோழியர் எல்லாரும் வந்து நின் முற்றம் வந்து கூடி நின்று மேக நிற வண்ணன் ஆகிய கண்ணனைப் பாடவும் செல்வமகளே! நீ அசையாமலும், பேசாமலும் நீ எதற்காக உறங்குகிறாய். அது தக்கது அன்று'' என்பதாம்.

விளக்கவுரை

கற்றுக் கறவை—கன்று என்பது வேற்றுமைத் தொடரில் கற்று என வல்லெழுத்துப் பெற்றது. கன்றை உடைய கறவை என விரிக்க.

பசுமிகுதி—செல்வ வாழ்க்கையர் என்பதை உணர்த்திற்று.

செருச்செய்யும்—வீர வாழ்க்கையர் என்பதாம்;

பொற்கொடி—பொன்னால் ஆகிய கொடி போன்றவளே! அன்மொழித்தொகை.

புற்று அரவு—புற்றிலிருந்து வெளிப்படும் பாம்பு.

அரவு போன்றது அல்குல் எனக் கூறப்பட்டுள்ளது.

அல்குதல்—தங்குதல் என்பது இதன் பொருள்.

பெண்ணின் இடைக்குக் கீழ் எடுப்பாக உள்ள இடத்தை அல்குல் என்ற சொல் குறிக்கிறது.

சிற்றாதே—சிறு அசைவும் செய்யாமல் என்பது பொருள்.

சிறு என்ற பண்புச்சொல்லை வினைச் சொல்லாக ஆக்கியது; இது புதுச் சொல் அமைப்பு ஆகும்.

பண்புப் பகுதியினின்று வினைச் சொல் அமைப்பது பொதுவாக வழக்கில் இல்லை.

பெண்டாட்டி — பெண்மையை ஆளுபவள் — வழக்குச் சொல். மனைவி என்ற பொருளில், ஈண்டு வரவில்லை. செல்வமகள் என்பதே பொருள் ஆகும்.

குற்றம் ஒன்றும் இல்லாத — பிறர் பொருளை எதிர் நோக்கி வாழ்பவர் அல்லர். தாக்க வருபவரையே தாக்குவர் அன்றி வீண் வம்புக்குப் போகாதவர் என்க.

மயிலே என்றது — சாயலை உடையவளே என்பதாம். 'முகில் வண்ணன்' மேகநிறத்தவன்; மேகத்தைக் கண்டும் நீ உவகை கொள்ள வேண்டாமா என்பதாம். மேகம் கண்டு மயில் ஆடும் என்ற நயம் காண்க. புளம்-காடு.

## 12. கனைத்திளங் கற்றெருமை

(எழுக எனல்)

*கனைத்திளங் கற்றெருமை கனறுக் கிரங்கி*
*நினைத்து முலைவழியே நின்று பால் சோர*
*நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!*
*பனித் தலை வீழநின் வாசற் கடைபற்றிச்*
*சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற*
*மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய்*
*இனித்தா னெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்*
*அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய்.*

**பதவுரை**

இளம் கற்று எருமை **கனைத்து**—இளம் கன்றுகளை உடைய எருமை கனைத்து

கன்றுக்கு இரங்கி—கன்றின் பசிக்கு இரங்கி

நினைத்து—நினைத்த அளவு

முலை வழியே நின்று பால் சோர—மடி வழியே தொடர்ந்து பால் வழிய

நனைத்து இல்லம் சேறு ஆக்கும்—நனைந்து வீட்டைச்
சேறு ஆக்குகின்ற

நற்செல்வன் தங்காய்—மிக்க செல்வத்தை உடையவ
னின் தங்கையே!

பனிதலை வீழ—பனி தலையிலே விழ

நின் வாசற்கடை பற்றி—உன் வாசலின் முன் வந்து
நின்று,

சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச்—செற்ற
சினத்தோடு இராவணனை அழித்த

மனத்துக்கு இனியானை—நம் மனத்துக்கு இனிய
நாரணனை,

பாடவும்— யாம் பாடவும்,

நீ வாய் திறவாய்— நீ வாய்திறக்காமல் இருக்கிறாய்;

இனித்தான் எழுந்திராய்— இனியாவது எழுந்திரு;

ஈதென்ன பேருறக்கம்—ஏன் இப்படி மிகுதியாகத்
தூங்குகிறாய்!

அனைத்து இல்லாத்தாரும் அறிந்து— எல்லா வீட்டாரும்
துயில் எழுந்து விட்டனர்.

**தொகுப்புரை**

இளங்கன்றின் தாயாகிய எருமை தன் கன்றுக்கு இரங்கி அதை மனத்தில் நினைத்துத் தன்மடி வழியே பால் சொரிய அதனால் நனைந்து இல்லம் சேறு ஆகிறது. அத்தகைய வளம் மிக்க வாழ்வு பெற்ற நற்செல்வனின் தங்கையே!

நாங்கள் பனி தலையிலே விழுந்து கொண்டிருக்க உன் வீட்டு வாசல்முன் நின்று இராவணனைக் கொன்ற மனத்துக்கு இனிய பெருமானை அவன் புகழைப் பாடவும் நீ வாய் திறவாமல் இருக்கிறாய்; இனியேனும் துயில் எழுக; இப்படியா நீ தூங்குவது? எல்லா வீட்டாரும் எழுந்து விட்டனர்.

**விளக்கவுரை**

''கன்றுக்கு அதன் தாய்ப்பசு இரக்கம் காட்டுகிறது. பனி தலையில் விழ யாம் அழைக்க நீ ஏன் கவனிக்காமல் இருக்கிறாய்'' என்பது உள்ளுறைப் பொருள்.

கனைத்து— எருமை கனைப்பது தான் இருக்குமிடத்தைக் கன்றுக்கு அறிவிக்க வேண்டி என்க.

கற்றெருமை- கன்றை உடைய எருமை; வேற்றுமையில் மெல்லினம் வல்லினம் ஆயிற்று.

கறப்பார் இல்லாமல் தானாகப் பால் சொரிந்து தரையை நனைக்கிறது; அதனால் வீடு சேறு ஆகிவிட்டது என்று கூறப்படுகிறது.

நற்செல்வன்— மிக்க செல்வம் உடையவன். நல்ல என்பது மிகுதியை உணர்த்தியது.

தங்காய்— மணமாகாத கன்னி என்பது உணர்த்தப்படுகிறது தங்கைக்கு மணமாகிவிட்டால் அங்கே இருக்க வேண்டிய தேவை இல்லை என்க.

பனி தலை விழுதல்— மார்கழி மாதம் பனி பெய்யும் என்பது கூறப்படுகிறது.

மனத்துக்கு இனியவன்— நாம் நேசிக்கும் பெருமான் என்பதாம்.

வாய் திறவாய்— பேசாமல் இருக்கிறாய்: நாங்கள் பாடவும் நீ மட்டும் ஏன் பாடாமல் இருக்கிறாய்! என்ற பொருளும் தருதல் காண்க.

இப்பாடலில் திருமால் மனத்துக்கு இனியவன் என்பது கூறப்படுகிறது. அவனை அனைவரும் நேசிக்கின்றனர் என்பதும் உணர்த்தப்படுகிறது.

## 13. புள்ளின்வாய் கீண்டானை

(தோழீ! எழுக)

*புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனை*
*கிள்ளிக்களைந்தானைக் கீர்த்திமை பாடிப் போய்*
*பிள்ளைகளெல்லாரும் பாவைக் களம் புக்கார்*
*வெள்ளி யெழுந்து வியாழம் உறங்கிற்று*
*புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்!*
*குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே*
*பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்*
*கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்.*

**பதவுரை**

புள்ளின்வாய் கீண்டானை— கொக்கு வடிவத்தில் வந்த பகாசுரனைப் பிளந்தவனை,

பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தானை—கொடிய அரக்கனானஇராவணனின் சிரங்களைக் களைந்தவனை,

கீர்த்திமை பாடிப் போய்— அவன் புகழைப் பாடிச் சென்று,

பிள்ளைகள் எல்லாரும்— இளம் பெண்கள் அனைவரும்

பாவைக் களம் புக்கார்— பாவையை வழிபடும் களத்தை அடைந்துவிட்டனர்.

வெள்ளி எழுந்து— சுக்கிரன் எழ

வியாழன் உறங்கிற்று— குரு மறைந்து விட்டது.

புள்ளும் சிலம்பினகாண்— பறவைகளும் கூட்டு ஒலி எழுப்பின.

**போது அரிக்கண்ணினாய்- மலர்களைப் போலச் சிவந்த அரிகள் (கோடுகள்) பரந்த கண்களை உடைய அழகியே!**

குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே-மிகுதியும் குளிர் உண்டாகும்படி-குடைந்து நீராடாமல்.

பள்ளிக் கிடத்தியோ—படுக்கையில் கிடப்பாயோ!

பாவாய்— பாவை போன்ற பெண்ணே!

நீ நன்னாளால்—நீ இந்த நல்ல நாளில் (ஆல்-அசை)

கள்ளம் தவிர்ந்து—ஒதுங்கி இருத்தலை நீங்கி

கலந்து—எங்களோடு கலந்து நீராட வருக.

## தொகுப்புரை

கொக்கு வடிவில் வந்த பகனையும், இராவணனையும் வென்ற பெருமானின் புகழைப்பாடிச் சென்று இளங்கன்னியர் அனைவரும் பாவையை வழிபடும் களத்தை அடைந்து விட்டனர். வெள்ளியாகிய சுக்கிரன் தோன்றி விட்டது. வியாழன் மறைந்து விட்டது. பறவைகள் கூட்டாக ஒலி செய் கின்றன. செவ்வரி பரந்து மலர்ச்சி உடைய கண்களை உடையவளே! உடம்பு சில்லிடக் குடைந்து நீராடாமல் படுக்கையில் கிடப்பாயோ!

பாவையே இந்த நல்ல நாளில் ஒதுங்கித் தனித்து இருப் பதைத் தவிர்த்து எங்களோடு கலந்து நீராட வருக.

## விளக்கவுரை

பொல்லா— தீமைகள் செய்யும் கொடிய; தீய

கிள்ளிக்களைந்தது— சிரசினை அறுத்து அரக்கனை ஒழித்தது.

கையால் எளிதாகக் கிள்ளியது— மிகவும் எளிமையாக அவனைக் கொன்று விட்டான் என்பதைக் கிள்ளி என்ற சொல்லாலும், அத் தீமை நீங்கி விட்டது என்பதைக் களை தல் என்ற சொல்லாலும் உணர்த்தியமை காண்க.

பிள்ளைகள்— பெண் பிள்ளைகளை உணர்த்தியது.

பாவைக்களம்—பாவை வழிபாட்டுக் களம்.

போது—மலர்;

அரி—கோடு சிவந்த கோடுகளை உடையது என்பதாம், செவ்வரி பரந்த கண் என்பர்.

குள்ளக்குளிர—இரட்டைக்கிளவி. மிகக் குளிர்ச்சி உண்டாக என்பதாம்.

கள்ளம் தவிர்த்து—மனத்தில் ஒன்று வைத்து ஒழுகுதல்; ஒதுங்குதல் அதன் விளைவு.

கலந்து—கலந்து நீராடுக எனக் கூட்டுக.

## 14. உங்கள் புழைக்கடை

(பரமனைப் பாடுவோம் எனல்)

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல் வாய்
கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்;
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்.

**பதவுரை**

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்—உங்கள் வீட்டுப் புழைக்கடையில் உள்ள தோட்டத்து நீர் நிலையில்.

செங்கழுநீர் வாய் நெகிழ்ந்தன—செங்கழுநீர்ப்பூ மலர்ந்தன; இதழ்கள் விரிந்தன.

ஆம்பல் வாய் கூம்பினகாண்—ஆம்பல் குவிந்துவிட்டன.

செங்கல் பொடிக் கூறை—செங்கல்லைப் பொடி செய் தாற்போன்ற நிறத்தை உடைய காவி உடையையும்,

வெண்பல் தவத்தவர்-அழுக்குப் படியாத வெண்மையான பல்லையும் உடைய தவசிகள்

தங்கள் திருக்கோயில்—தத்தம் திருக்கோயில்களுக்கு

சங்கிடுவான்—சங்கு ஊதுவதற்கு

போதந்தார்—போகிறார்கள்.

எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும் நங்காய்—எங்களை முற்பட்டு எழுப்புவதாக வெறும் வாய்ப் பேச்சுப் பேசும் நங்கையே!

எழுந்திராய்—எழுந்திடுக.

நாணாதாய்—இன்னுமா தூக்கம்? வெட்கமில்லையா?

நாவுடையாய்—பேச்சுக்காரி

சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்—நாரணன்;

பங்கயக் கண்ணானை—தாமரை மலர் போன்ற கண்களை உடையவனை

பாடு—பாடுவோமாக.

## தொகுப்புரை

உங்கள் புழைக்கடைத் தோட்டத்துக் குளத்தில் செங்கழுநீர்ப்பூ மலர்ந்துவிட்டது; ஆம்பல் கூம்பிவிட்டது. காவிஉடையும், வெண்பல்லும் உடைய தவசிகள் தத்தம் கோயில்களுக்குச் சங்கு ஊதச் செல்கின்றனர். எங்களை வந்து எழுப்புவதாக வெறும் பேச்சுப் பேசும் தலைமைப் பெண்ணே எழுந்திரு, இன்னுமா உறக்கம். வெறும் பேச்சுக் காரிதான் நீ! சங்கும் சக்கரமும் ஏந்திய கையன் தாமரைக் கண்ணன் ஆகிய நாரணனைப் பாடுவோம் வா எழுக.

**விளக்கவுரை**

உங்கள் புழைக்கடை— ''எங்கேயோபார்க்கவேண்டாம் உம் வீட்டுத் தோட்டத்தை எழுந்து பார்'' என்று கூறியது.

வாவி—நீர் நிலை; குளம்.

காலையில் செங்கழுநீர்ப்பூ இதழ் விரியும்; ஆம்பல் குவியும்,

செங்கல்; வெண்பல்—முரண் தொடை.

கூறை—கூறு படுத்தி உடுத்தும் ஆடை.

தங்கள் திருக்கோயில்—அவரவர் பணி செய்யும் கோயில் களுக்குத் தவசிகள் காலையில் சென்று சங்கு ஊதுவர் என்று தெரிகிறது.

சங்கிடுவான்—சங்கு இட; வினையெச்சம்.

எழுப்புவான்—வினையெச்சம்; எழுப்புவதாக; எழுப்ப.

நாணாதாய்—வெட்கமில்லையா நீ இன்னும் உறங்கு கிறாயே என்பது.

தடக்கை—விசாலமான கைகள்.

பங்கயம்—பங்கஜம்-தாமரை.

கண்ணான்—கண்ணை உடையவன்.

பொழுது விடிந்தது; அதற்கு அறிகுறிகள் மலர்களின் மலர்ச்சியும் கூம்பலும், தவசிகளின் செல்கையும்;

நங்காய்! நாணாதாய்! நாவுடையாய்!—விளிகள்.

சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் பங்கயக் கண்ணன் நாரணனைப் பாடுவோமாக,

## 15. எல்லே! இளங்கிளியே!

(உரையாடல்கள்)

*''எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ!''*
*''சில்லென் றழையேன்மின்! நங்கைமீர்!*
*போதர்கின்றேன்''*

"வல்லை உன் கட்டுரைகள் பண்டே உன்
வாயறிதும்"
"வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக"
"ஒல்லை நீ போதாய்; உனக்கென்ன வேறுடைமை"
"எல்லாரும் போந்தாரோ?" "போந்தார்;
போந்தெண்ணிக் கொள்;
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்."

**பதவுரை**

எல்லே இளங்கிளியே—ஏடி இளங்கிளி போன்றவளே!

இன்னம் உறங்குதியோ—பொழுது விடிந்தும் இன்னுமா உறங்குகிறாய்!

சில்லென்று அழையேன்மின்—தூக்கத்தைக் கெடுக்காதீர்,

நங்கைமீர் போதருகிறேன்—தோழியர்களே! இதோ விரைவில் வந்து விடுகிறேன்.

வல்லை—பேச்சில் வல்லவள் நீ

உன் கட்டுரைகள் பண்டே உன் வாயறிதும்—முன்பே உன் பேச்சு பற்றி எங்களுக்குத் தெரியும்.

வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக—கெட்டிக்காரர்கள் நீங்களே, நானேதான் யாராவது இருக்கட்டும்.

ஒல்லை நீ போதாய்—விரைவில் நீ புறப்படுக

உனக்கு என்ன வேறு உடைமை?—நீ மட்டும் எம்மோடு கலக்காமல் என்ன தனியாக நடந்து கொள்கிறாய்?

எல்லாரும் போந்தாரோ—எல்லாரும் புறப்பட்டு விட்டனரா?

போந்தார், போந்து எண்ணிக்கொள்—போய் விட்டனர், போய் விட்டதாகக் கருதிக்கொள்.

வல்ஆனை கொன்றானை — வலிய யானையைக் கொன்றவனை

மாற்றாரை மாற்று அழிக்கவல்லானை—பகைவர்களை அவர் தம் பகையை அழிக்கவல்லமை உடையவனை

மாயனை—மாயம் வல்லவனை

பாடு—பாடுவோமாக; எழுந்து வருக.

**தொகுப்புரை**

தோழியர்—''ஏடி தொழி! இன்னுமா உறங்குகிறாய்?''

தலைவி—''காது துளைக்க இரைச்சல் இடாதீர்; இதோ புறப்படுகின்றேன்''

தோழியர்—''நீ பேசுவதில்தான் கெட்டிக்காரி; முன்பே உன் பேச்சை நாங்கள் அறிவோம்.''

தலைவி—''நீங்களோ நானோ யார் கெட்டிக்காரர்? எப்படியாவது இருந்து போகட்டும்''

தோழியர்—''விரைவில் நீ எழுந்து வருக; உனக்கு ஏன் தனிமை?''

தலைவீ—'எல்லாரும் புறப்பட்டுவிட்டார்களா?''

தோழியர்—''சென்றுவிட்டனர்; போய்விட்டதாக எண்ணிக்கொள்;''

தோழியர்—''நாரணனைப் பாடுவோம் வா; எழுக.''

**விளக்கவுரை**

'எல்லே' என்பது தோழியை அழைக்கும் விளி;

'எலுவ' என்று சங்க இலக்கியத்தில் ஒரு தொடர் இடம் பெற்றுள்ளது; தோழன் என்பது பொருளாம்.

எல்லே—விளக்கம் உடையவளே என்பது சொல்லின் பொருளாகும்.

இப்பொழுதும் 'எலே' என்ற சொல்வழக்கு உள்ளது காண்க. இது இளையவரை அழைக்கும் விளியாக உள்ளது.

சில்லென்று அழையேன்மின்—"நீர் அழைப்பது மிக்க குளிர்ச்சி உடைய தண்ணீரைக் கொட்டுவதுபோல இருக்கிறது'' என்பதாம்.

அழையேல்—எதிர்மறை; ஏல்—எதிர்மறைவிகுதி.

அழையேல்மின் — முன்னிலைப் பன்மை எதிர்மறை வினைமுற்று.

போதரு—ஒரே சொல், போதலைத் தருதல் என்பதன் இணைப்புச்சொல்.

வல்லை—வல்லவள் நீ. முன்னிலை ஒருமைக் குறிப்பு வினைமுற்று.

கட்டுரைகள், பண்டே உன் வாய் அறிதும் எனக் கூட்டுக. நாவுடையாய் என்று முன்னர்க் கூறியதைக் காண்க. (செய்யுள்—14)

ஒல்லை—விரைவாக.

வேறு உடைமை—தனித்து வர எண்ணுதல்.

வல் ஆனை கொன்றது—கம்சன் அரண்மனை வாயிலில் நிறுத்தி வைத்த குவலயாபீடம் என்னும் யானையைக் கண்ணன் கொன்றான் என்பது கதை.

மாற்று அழிக்கவல்லான்—அந்த ஆற்றல் என்றும் நிலைத்துள்ளது என்பதாம். மாற்று—பகை.

வல்லானை கொன்றான்; மாற்றாரை மாற்றழிக்க வல்லான்—இவை நாரணனைப் புகழ்ந்து பாடுதல்—

பாமாலை ;

## 16 நாயகனாய் நின்ற

(வாயிலோனை விளித்தல்)

நாயகனாய் நின்ற நந்தகோ பனுடைய
கோயில்காப் பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில்காப்பானே! மணிக்கதவம் தாள்திறவாய்;
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே
வாய்நேர்ந்தான்;
தூயோமாய் வந்தோம்! துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்,

**பதவுரை**

நாயகனாய் நின்ற நந்தகோபன் உடைய-தலைவனாக இருக்கும் நந்தகோபனின்.

கோயில் காப்பானே—அரண்மனையைக் காவல் செய்பவனே.

கொடித் தோன்றும் தோரணவாயில் காப்பானே—கொடிகளும், தோரணமும் தோன்றும் வாயிலைக் காப்பவனே!

மணிக்கதவம் தாள்திறவாய்—மணிகள் பொருந்திய நெடுங்கதவின் தாளைத் திறப்பாயாக!

ஆயர் சிறிமியரோமுக்கு—ஆயர் சிறுமியர் ஆகிய எமக்கு

அறை பறை—ஒலிக்கும் பறையை

மாயன் மணிவண்ணன்—கண்ணன்

நென்னலே வாய்நேர்ந்தான்—நெருநலே (நேற்றே) தருவதாக இசைவு தந்தான்.

துயில் எழப் பாடுவான்—துயில் எழுப்பும் திருப்பள்ளி எழுச்சி பாடுவதாக

தூயோமாய் வந்தோம்—மனம் தூயவர்களாக வந்துள் ளோம்.

வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே—ஏதாவது பேசிக் கொண்டிருக்காமல்

நேய நிலைக் கதவம்-பொருந்தியுள்ள நெடுங்கதவினை.

நீக்கு—நீக்கித் திறப்பாயாக!

அம்மா—விளிச்சொல்! தாய்மை உள்ளம் படைத்த அய்யா என்ற பொருளினது.

## தொகுப்புரை

ஆயர் பாடியில் தலைவனாக உள்ள நந்தகோபனின் அரண்மனையையும், வாயிலையும் காப்பவனே! நெடுங் கதவைத் திறப்பாயாக.

மாயன் மணிவண்ணன் ஆயர் சிறுமியர் எங்களுக்கு நேற்றே பரிசிலாகப் பறை தருவதாக அறிவித்துள்ளான்; நீ எங்களைத் தடுக்காதே; திருப்பள்ளி எழுச்சி பாடுவதற்காகத் தூய மனத்தோடு வந்திருக்கிறோம்.

ஏதாவது பேசிக் கொண்டு காலம் தாழ்த்தாதே!

அய்யா! மூடி இருக்கும் கதவினைப் பிரித்து நீக்குக.

## விளக்கவுரை

கோயில் காப்பவனும், வாயில் காப்பவனும் ஒருவனே என்க.

மணிக்கதவம்—நெடுங்கதவு என்பது பெறப்பட்டது.

சிறுமியரோம்—வினையாலணையும் பெயர்.

அறைபறை—வினைத்தொகை; அடிக்கும் பறை.

நென்னல்—நெருனல் என்பதன் மரூஉ முடிபு; நேற்று என்பது பொருள்.

துயில் எழப்பாடுவான் வந்தோம் எனக் கூட்டுக.
மாற்றாதே—மறுத்துப் பேசாது;
பறை பெறுதல் உறுதி என்பது ஆகும்.

அம்மா என்பது வாயில் காப்பவனை விளித்தது, அய்யா என்ற பொருளினது. வேண்டுதல் பொருள் தரும் சொல்.

நேய நிலைக்கதவு—பொருந்திய கதவு; நேசத்தோடு கதவு திறப்பாயாக எனவும் கொள்ளலாம்.

நீக்கு-இணைவது இரண்டு கதவுகள் எனத் தெரிகிறது.

## 17. அம்பரமே தண்ணீரே

(கண்ணன் குடும்பத்தவரை எழுப்புதல்)

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ் செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா! எழுந்திராய்!
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குல
விளக்கே!
எம்பெருமாட்டி யசோதாய்! அறிவுறாய்
அம்பர மூடறுத்தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே! உறங்கா தெழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்.

**பதவுரை**

அம்பரமே—ஆடையும்,
தண்ணீரே சோறே—தண்ணீரும், சோறும்.

அறம் செய்யும் எம்பெருமான் நந்தகோபாலா-பிறர்க்குத் தந்து அறம்செய்யும் எம் தலைவர் நந்த கோபாலரே!

எழுந்திராய்—துயில் எழுக.
கொம்பனார்க்கு எல்லாம்—பெண்களுககு எல்லாம்.
கொழுந்தே—போற்றத் தக்கவளே

குல விளக்கே—ஆயர் குலத்தை ஒளிவிடச் செய்யும் தலைவியே!

எம்பெருமாட்டி யசோதாய்—எம் தலைவி யசோதையே.

அறிவுறாய்—விழித்து எழுக.

அம்பரம் ஊடு—ஆகாயத்தின் ஊடு.

அறுத்து ஓங்கி உலகு அளந்த-கிழித்துக்கொண்டு மேலே-உயரச் சென்ற.

உம்பர்கோமானே—தேவர்கள் தலைவனே!

உறங்காது எழுந்திராய்—துயில் எழுக.

செம்பொற் கழலடிச் செல்வா—பொன்னால் ஆகிய வீரக் கழலைக் காலுக்கு அணியும் செல்வமகனாகிய

பலதேவா—பலதேவனே!

உம்பியும் நீயும் உறங்கேல்—உன் தம்பியும் நீயும் உறங்காது எழுக.

## தொகுப்புரை

உடுக்க உடையும், குடிக்கத் தண்ணீரும், உண்ணச் சோறும் தந்து தருமம் செய்யும் எம் தலைவன் நந்த கோபாலனே! துயில் எழுக; மகளிர் போற்றும் மாபெரும் தலைவி யசோதையே! விழித்து எழுக; உலகளந்த பெருமானே! உறங்காது எழுந்தருள்க; பலதேவா! நீயும் உன் தம்பியும் உறங்காது எழுந்தருள்க.

## விளக்கவுரை

அம்பரம்—உடை மானிடர் உடுத்துவது; விண்ணை உடுத்துவது ஆகாயம். ஒரே சொல் இருவேறு பொருளில் வருதல் காண்க.

அம்பரமே, தண்ணீரே, சோறே—ஏகாரம் எண்ணிடைச் சொல்; உம் என்ற பொருளில் வந்துள்ளது.

நந்த கோபாலன்—கண்ணனின் வளர்ப்புத் தந்தை.
அறிவுறாய்—விழித்து எழுக;
செல்வன்—பலதேவன்;
உறங்கேல்—ஏல் எதிர்மறை விகுதி;

காலில் வீரக்கழல் சிலம்பு அணிந்திருந்தான் என்க. அதனால் பலதேவன் கழலடிச் செல்வன் எனக் கூறப் பட்டான்.

**ஓங்கி உலகளந்த உம்பர் கோமான்**

ஓங்கி உலகளத்த உத்தமன் என்று முன்னர்க் கூறப் பட்டது. எங்கும் நிறைந்த பரமன் என்ற கருத்தை வற்புறுத் தல் காண்க; இது பாமாலை என்க.

ஈண்டு நந்தகோபாலன் (தந்தை), யசோதை (தாய்), பலதேவன் (தமையன்), உம்பர் கோமான் (கண்ணன்) குடும்பத்து அனைவரையும் எழுப்புதல் காண்க. இதுவும் திருப்பள்ளி எழுச்சிப் பாடல் எனலாம்.

## 18 உந்து மதகளிற்றன்

(நப்பின்னையை விளித்தல்)

*உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்*
*நந்தகோ பாலன் மருமகளே! நப்பின்னாய்!*
*கந்தம் கமழும் குழலீ! கடை திறவாய்.*
*வந்தெங்கும் கோழி அழைத்தனகாண்; மாதவிப்*
*பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்;*
*பந்தார்விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்*
*செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப*
*வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.*

**பதவுரை**

உந்துமதகளிற்றன்—யானைகளை உடையவன்;
ஓடாத தோள்வலியன்—போரில் புறமுதுகிடாத வீரன்;

நந்தகோபாலன் மருமகளே—நந்தனின் மருமகளே!
நப்பின்னாய்—நப்பின்னையே!
கந்தம் கமழும் குழலீ—மணம் வீசும் கூந்தலை
உடையவளே!
கடை திறவாய்—கதவு திறப்பாய்;
வந்து எங்கும் கோழி அழைத்தன காண்—கோழி எங்கும்
வந்து கூவி அழைக்கின்றன;
மாதவிப் பந்தல்மேல் குயிலினங்கள் கூவின காண்—
மாதவிப்பந்தல்மீது குயில்கள் கூட்டமாக வந்து
கூவுகின்றன;
பந்தார் விரலி—பந்தாடி மகிழ்பவளே!
உன் மைத்துனன் பேர்பாட—உன் கணவனின்
புகழைப்பாட
செந்தாமரைக்கையால் சீர் ஆர் வளை ஒலிப்ப—உன்
அழகிய கையால் வளையல்கள் ஒலி செய்ய வந்து
திறவாய்—மகிழ்ச்சியோடு திறப்பாய்.

## தொகுப்புரை

யானைப் படைகொண்டு பகைவர்களை எதிர்க்கும் ஆற்றல் உடையவன் நந்தகோபன்; அவன் மருமகளே! மணம் கமழும் கூந்தலை உடைய நப்பின்னாய்! கோழி அழைத்தன; குயில் இனம் கூவின; பொழுது விடிந்து விட்டது; உன் மைத்துனன் பேர்பாட நீயும் வா; மகிழ்ந்து கதவைத்திற என்பதாம்.

## விளக்கவுரை

உந்து மத களிறு—மதம் வெளிப்படுகின்ற யானை; ஈண்டு யானைகள் எனப் பன்மையை உணர்த்திற்று.

மருமகளே, நப்பின்னாய், குழலீ, பந்தார் விரலி—விளிகள்.

அழைத்தனகாண்; கூவினகாண்—காண் முன்னிலை அசைகள்.

பந்து ஆர் விரலி—பந்தினைக் கைப்பற்றும் விரலை உடையவள். இது அவள் செல்வ மகள் என்பதை உணர்த்துகிறது;

மைத்துனன்—கணவனை உணர்த்திற்று;

மைந்து—வலிமை;

வலிமை உடையவன் என்பதாம். இப்பொழுது கணவனின் தம்பிக்கு அந்தப் பெயர் வழங்குகிறது; பேச்சு வழக்கில் மச்சினன், மச்சான் என வழங்குகின்றனர்.

பேர் பாட—புகழ்பாட; பெயர்—பேர் எனத் திரிந்தது—

கண்ணன், நப்பின்னை மைத்துனன் என்பவை பாமாலைப் பகுதிகள்.

## 19. குத்து விளக்கெரிய

(கண்ணனை எழுப்பி அனுப்புக எனல்)

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்;
மைத்தடங் கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய் காண்;
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லையால்;
தத்துவ மன்று; தகவேலோ ரெம்பாவாய்.

**பதவுரை**

குத்து விளக்கு எரிய—குத்து விளக்கு ஒளி வீச

கோட்டுக் கால் கட்டில்மேல்—யானை தந்தத்தினால் ஆகிய கால்களை உடைய கட்டிலின் மீது

மெத்து என்ற பஞ்ச சயனத்தின் மேல் ஏறி—மெதுவான பஞ்சு அணை மீது சயனித்து,

கொத்து அலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பா—நப்பின்னையை மார்பாரத் தழுவிக்கொண்டு உறங்கும் கண்ணனே!

வாய்திறவாய்—பேசாமல் இருக்கிறாயே! வாய்திறக்கக் கூடாதா?

மைத்தடங் கண்ணினாய்—மை பூசிய அகன்ற கண்களை உடையவளே

நீ உன் மணாளனை எத்தனை போதும்—நீ உன் கணவனைச் சிறிது பொழுதும்.

துயில் எழ ஒட்டாய்—தூக்கத்தை விட்டு எழ அனுமதிக்கமாட்டாய்.

எத்தனையேலும் பிரிவாற்ற கில்லையால்—சிறிதும் பிரிதல் இயலாமல் இருக்கின்றாய்;

தத்துவம் அன்று—இது நல்லது அன்று.

தகவு—ஏற்றதும் அன்று;

## தொகுப்புரை

கட்டிலில் நப்பின்னையை அணைத்துக் கொண்டு உறங்கும் மார்பினை உடையவனே! நீ ஏதும் பேசாமல் இருக்கிறாய்.

பேரழகியே! நீ உன் கணவனை எழுப்பத் தயங்குகிறாய்; பிரிவைத் தாங்கும் ஆற்றல் உனக்கு இல்லை, இது நியாயமாகப் படவில்லை; ஏற்கத் தக்கதும் அன்று.

## விளக்கவுரை

இங்கே நப்பின்னையின் கட்டில் சிறப்பிக்கப்பட்டுள்ளது. 'கோட்டுக்கால்' கட்டில் எனக் கூறப்பட்டது. கோடு—யானைத் தந்தம்.

நப்பின்னையின் அணைப்பு உன்னைத் தடுக்கிறது. அந்த நயப்பைச் சிறிது விட்டுக் கொடுக்கக் கூடாதா என்று கண்ணனுக்கே கூறியதாகிறது.

ஆற்ற கில்லை—கில் இடைச்சொல்; ஆற்றலை உணர்த்துவது.

தத்துவம்—கொள்கை; நியாயம்; இது பொது நியதி.

தகவு—உனக்கு இது தகாது என்று சிறப்பு நியதி கூறப் பட்டது என்க. தகவு அன்று என ஒரு சொல் கூட்டிப்பொருள் கொள்க.

யார்மீது குறை கூறுவது? கண்ணனுக்கோ நப்பின்னையைவிட்டுப் பிரிய, மனம் இல்லை; அவளும் விட்டுக் கொடுப்பதாக இல்லை; என்ன செய்வது; சிறிது விட்டுக் கொடு; எங்களுக்கு அருள் செய்ய அனுப்பு என்று கேட்டுக்கொள்கிறார்கள்.

''குக்கூ என்றது கோழி;
துட்கு என்றது என் தூய நெஞ்சம்;
தோள்தோய் காதலர்ப் பிரிக்கும் வாள்போல்
வைகறை வந்ததால் எனவே''

இக் குறுந்தொகைப் பாடல் இக்கருத்தையே உணர்த்துகிறது.

கோழி குக்கூ என்றதாம்; தோளைத் தழுவும் காதலனைப் பிரிக்கும் விடியற் பொழுது வாளைப்போல வந்து விட்டதே என்று திடுக்கிடுகிறாள்; தலைவி தலைவனைப் பிரிய மனம் இல்லாமல் இருக்கும் நிலையைப்பற்றி இக்குறுந் தொகைப் பாடல் அழகாகச் சித்திரிக்கிறது. அதே நிலை தான் நப்பின்னை நிலையும்.

## 20. முப்பத்து மூவர்

(நப்பின்னையை உதவுக எனல்)

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்!
செப்ப முடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்;
செப்பன்ன மென்முலை செவ்வாய் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்;
உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை
இப்போதே எம்மைநீ ராட்டேலோ ரெம்பாவாய்.

**பதவுரை**

முப்பத்து மூவர் அமரர்க்கு—முப்பத்து மூன்று பிரிவினர் ஆகிய முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு.

முன்சென்று—நடுக்கம் வருவதற்கு முன்சென்று

கப்பம் தவிர்க்கும் கலியே—அவர் துயரத்தைத் தீர்க்கும் பெருமையை உடையவனே

துயில் எழாய்—துயில் எழுக.

செப்பம் உடையாய்—செம்மை உடையவனே!

திறல் உடையாய்—வலிமை உடையவனே!

செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலா—பகைவர்க்கு அழிவு நல்கும் மேலானவனே!

துயில் எழாய்—துயில் எழுக.

செப்பன்ன மென்முலை—செம்பொற்குடம் போன்ற விரும்பத்தக்க அழகுடைய முலையினையும்,

செவ்வாய் சிறுமறுங்குல் — சிவந்த வாயும், சிறிய இடையும் உள்ள

நப்பின்னை நங்காய்— நப்பின்னை பிராட்டியே!
திருவே துயில் எழாய்—திருமகளே! துயில் எழுக;
உக்கமும் தட்டொளியும் தந்து—விசிறியும் கண்ணாடியும் தந்து அனுப்பி
உன் மணாளனை இப்போதே—உன் கணவனை இப்பொழுதே
எம்மை நீராட்டு—எம்மை நீராட வைப்பாயாக

## தொகுப்புரை

முப்பத்து மூன்று கோடி தேவர்க்கு முற்பட்டுச் சென்று அவர்தம் நடுக்கத்தைத் தீர்க்கும் பெருமையனே துயில் எழுக. செப்பம், திறல், பகைவரை அழிக்கும் மேன்மை இவற்றை உடையவனே துயில் எழுக; நப்பின்னை நங்காய்! விசிறியும் கண்ணாடியும் தந்து அனுப்பி எம்மை நீராட்ட அனுப்புவாயாக.

## விளக்கவுரை

முப்பத்து மூன்று வகையினர்—அட்ட வசுக்கள் எண்மர்; ருத்திரர் பதினொருவர்; துவாதச ஆதித்தியர் பன்னிருவர்; அசுவனி தேவதைகள் இருவர் ஆக முப்பத்து மூன்று பேர்; அவர்கள் இனம் ஒவ்வொன்றும் ஒரு கோடியினர் எனக் கூறப்படுகிறது.

கப்பம்—கம்பம் என்பது எதுகை நோக்கிக் கப்பம் எனத் திரிந்தது
கம்பம்—நடுக்கம்;
கலி—துள்ளுதல்; மிடுக்கு; பெருமை.
செப்பு—செம்பொன்—இங்குக் குடத்தை உணர்த்தியது.
உக்கம்—விசிறியை உணர்த்தும் வழக்காற்றுச் சொல்.
தட்டு ஒளி—ஒளித்தட்டு என மாற்றுக; ஒளியை உடைய தட்டு, அது கண்ணாடியாகும்.

நீராட்டு—நீராடச் செய்க;—பிறவினை;

நீராடுதலே பாவை நோன்பின் அடிப்படை; அதற்குக் கண்ணனிடம் பறை கேட்பதோடு அவ்விழாவிற்கு உக்கம் (விசிறி); தட்டொளி (கண்ணாடி) இவற்றையும் பெறவிழை கின்றனர் என்பதாம்.

அமரர்க்கு முன் சென்று கப்பம் தவிர்க்கும் கலியே! செப்பம் உடையாய்! திறல் உடையாய்! விமலா! இவை இறைவனைப் பற்றிய விளிகள். பாமாலைப் பகுதி.

## 21 ஏற்ற கலங்கள்

(போற்றி வந்தோம் எனல்)

*ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப*
*மாற்றதே பால் சொரியும் வள்ளற் பெரும் பசுக்கள்*
*ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்:*
*ஊற்றமுடை யாய்! பெரியாய்! உலகினில்*
*தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்:*
*மாற்றார் உனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்*
*ஆற்றாது வந்துன் னடிபணியுமா போலே*
*போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ*
*ரெம்பாவாய்.*

**பதவுரை**

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப—தாங்கிய பாத்திரங்கள் நிறைந்து வழியும்படி மிகுதியாக அளிக்கும்.

வள்ளல் பெரும் பசுக்கள்—மிக்க வள்ளன்மை மிக்க வளமான பசுக்களை,

ஆற்றப் படைத்தான் மகனே—மிகுதியாகப் படைத்தவனின் திருக்குமரனே!

அறிவுறாய்—விழித்து எழுக;

ஊற்றம் உடையாய்—அருள் மிக்கவனே!
பெரியாய்—பெருமை உடையவனே!
உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே—உலகில் தோன்றிய ஒளிப் பொருளே!
துயில் எழாய்—துயில் எழுக;
மாற்றார் உனக்கு வலிதொலைந்து—பகைவர் உனக்குத் தோற்று,
உன் வாசற்கண் ஆற்றாது வந்து—உன் வாசலில் செயலற்று வந்து
உன் அடி பணியுமா (று) போல-உன் கால்களில் விழுந்து வணங்கிப் போற்றுவது போல
யாம் போற்றீ—வந்தோம் புகழ்ந்து-யாம் உன்னைத் துதித்து வந்தோம்; புகழ்ந்து உயர்வோம்.

## தொகுப்புரை

கறக்கும் பால்பாத்திரங்கள் பொங்கி வழியும்படி பால் தரும் வளம்மிக்க பசுக்கள் மிகுதியாகப் படைத்தவன் மகனே! விழித்து எழுக! பகைவர்கள் போரில் தோற்றுப் பின் உன்னை அடைக்கலம் அடைந்து போற்றுவதைப் போல் உன் திருவடிகளை யாம் போற்றிப் புகழ்ந்து உயர்வு பெறுவோம்.

## விளக்கவுரை

எதிர்பொங்கி மீது அளிப்ப—நிறைந்துவழிய; மாற்றாது-மாறுபடாது; தொடர்ந்து பகைவர்கள் வேறு கதி இல்லாமல் நீதான் அரண் என்று வந்து வணங்குவதைப்போல யாம் அடைக்கலம் அடைகின்றோம்,

பகைவர் சரணடைவதுபோல் யாம் சரண் அடைகின்றோம் என்பதை முழுமையாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பகைவர்கள் அச்சத்தினால் அடிபணிகிறார்கள்;

இவர்கள் அவன்தான் தலைவன் என்று ஒப்புக்கொண்டு அதனால் அவன் பெருமைகளை அறிந்து உணர்ந்து அன்பு கொள்கின்றனர் என்பதே பொருந்தும்.

''பகைவர் புகழ்கின்றார்கள் உன் பெருமை அறிந்து; அன்பர்கள் யாமும் புகழ்வோம் உன் பெருமை உணர்ந்து'' என்பதாம்.

ஆற்றப்படைத்தான் மகனே! ஊற்றம் உடையாய்! பெரியாய்! சுடரே! இவை இறைவனைப் போற்றும் வாசகங்கள்-பாமாலைப் பகுதிகள்.

## 22. அங்கண்மா ஞாலத் தரசர்

(பாவங்களை நீக்குக எனல்)

*அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான*
*பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட்டிற்கீழ்*
*சங்கம் இருப்பார்போல் வந்து தலைப் பெய்தோம்*
*கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே*
*செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?*
*திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்*
*அங்க ணிரண்டும் கொண்டு எங்கள்மேல்*
*நோக்குதியேல்*
*எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய்.*

அங்கண்மா ஞாலத்து அரசர் - அழகிய இடம் அகன்ற பெரிய உலகத்து அரசர்

அபிமான பங்கமாய்—தங்கள் ஆணவம் அடங்கப்பெற்று

நின் பள்ளிக்கட்டின் கீழ்-உன்னுடைய கட்டிலின் கீழ்

சங்கம் இருப்பார் போல்-கூட்டமாக வந்த இருப்பவரைப் போல்.

வந்து தலைப் பெய்தோம் - நாங்களும் வந்து அணுகியுள்ளோம்;

கிண்கிணி வாய்ச் செய்த தாமரைப்பூ போல்—கிண்கிணி என்னும் காலணியில் பொறித்த தாமரைப்பூ வடிவுபோல.

செங்கண்—சிவந்த உம் கண்ணின் பார்வை

சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ—சிறிது சிறிதாக எங்கள் மேல் படக் கூடாதோ

திங்களும் ஆதித்தனும் எழுந்தாற் போல—சந்திரனும் சூரியனும் ஒருசேர எழுந்ததைப் போல்

அங்கண் இரண்டும் கொண்டு எங்கள் மேல் நொக்குதி யேல்—உன் அழகிய கண்கள் இரண்டும் கொண்டு எங்களைப் பார்த்து அருள் செய்தால்

எங்கள் மேல் சாபம் இழிந்து—எங்களிடம் சேர்ந்துள்ள பாவச்சுமைகள் நீங்கிவிடும்.

## தொகுப்புரை

உலகத்து மா மன்னர்கள் தங்கள் ஆணவம் சிதைந்து உன் பள்ளிக் கட்டிலில் வந்து உன் தரிசனத்துக்காகக் காத்துக் கொண்டு இருப்பதுபோல யாமும் வந்து கூடியுள்ளோம்.

உம் அழகிய கண் பார்வை எம்மேல் சிறிது சிறிதாகப் படக் கூடாதா? திங்களும் சூரியனும் ஒரு சேர எழுந்ததைப் போல் உன் அழகிய கண்கள் இரண்டும் கொண்டு எங்கள் மேல் செலுத்தி அருள் செய்தால் எங்கள்மேல் சேர்ந்துவிட்ட பாவச் சுமைகள் நீங்கிவிடும்.

## விளக்கவுரை

அங்கண் மாஞாலம் —அழகிய இடத்தை உடைய பெரிய உலகம்.

அங்கண் இரண்டு—கண்கள் இரண்டும்;
அங்கண்—இருவேறு பொருளில் வருவது காண்க;
கிங்கிணி—கிண்கிணி எதுகை நோக்கித் திரிந்தது.
அபிமான பங்கம்—தான் என்னும் செருக்குச் சிதைந்து என்பதாம்.

## 23. மாரிமலை முழைஞ்சில்

(அருள் செய்க)

*மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்*
*சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து*
*வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி*
*மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு*
*போதருமா போலலே நீ பூவைப்பூ வண்ணா உன்*
*கோயில்நின் றிங்ஙனே போந்தருளிக் கோப்புடை*
*சீரிய சிங்கா சனத்து இருந்து யாம் வந்த*
*காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய்*

மாரி மலைமுழைஞ்சில்—மழைக்காலத்தில் மலைக் குகையில்

மன்னிக்கிடந்து உறங்கும்—நிலைபெற்றுப் படுத்து உறங்கும்

சீரிய சிங்கம்—சிறப்புமிக்க ஆண் சிங்கம்

அறிவுற்றுத் தீவிழித்து—துயில் எழுந்து கோபித்துப் பார்த்து

வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி—மெய்ம் மயிர் சிலிர்க்க எழுந்து நான்கு திசையும் பெயர்ந்து எழுந்து சென்று

மூரி நிமிர்ந்து- மூர்க்கத்தனமாக நிமிர்ந்து

முழங்கிப் புறப்பட்டுப் போதருமா போல—பேரொலி செய்து புறப்பட்டு வெளி வருவது போல

நீ பூவைப்பூ வண்ணா — காயம்பூ போன்ற நிறத்தினை உடையவனே நீ!

உன் கோயில் நின்று இங்கனே போந்தருளி—கோயிலை விட்டு இங்கு வந்து அருளி,

கோப்புடைய சீரிய சிங்காதனத்து இருந்து — கட்டுக் கோப்பு உடைய சிறப்பான சிங்காதனத்துமீது அமர்ந்து,

யாம் வந்த காரியம்—யாம் வந்த காரியத்தை.

ஆராய்ந்து அருள்—கேட்டு அறிந்து தெளிந்து முடிவு செய்து அருள் செய்வாயாக.

## தொகுப்புரை

மழைக்காலத்தில் மலைக்குகையில் தங்கிப் படுத்து உறங்கும் ஆண் சிங்கம் விழித்து எழுந்து கண் சிவந்து வியர்வையோடு கூடிய மயிர் பொங்க நாலாபக்கமும் சென்று உதறி மூர்க்கத்தனமாக முற்றி நிமிர்ந்து முழக்கம் செய்து புறப்பட்டு வெளியே வருவதைப்போல,

காயம்பூ நிறத்துக் கண்ணா! நீ உன் அரண்மனையில் இருந்து வெளிவந்து இங்கே வந்து அருளி வேலைப்பாடு உடைய அழகிய சிங்காசனத்துமீது அமர்ந்து யாம் வந்த காரியம் ஆராய்ந்து அருள் செய்வாயாக.

## விளக்கவுரை

குகையில் இருந்து சிங்கம் வெளிப்படுவது போலத் திமிர் வாங்கி நிமிர்ந்து தூக்கத்தை உதறித் தள்ளி நீ சிங்காசனத்தில் வந்து அமர்க! என்று கூறப்படுகிறது.

மாரிமலை முழைஞ்சு — மலைக்குகையில் உறங்கிக் கிடக்கும் சிங்கம் பசியின் தூண்டுதலால் வெளிப்படும்போது அதன் கண்கள் சிவந்த நிறத்தோடு காணப்படுவது கூறப் படுகிறது.

''மழைக்காலத்தில் மலைக்குகையில் தங்கிப்படுத்து உறங்கும் ஆண் சிங்கம் விழித்து எழுந்து கண் சிவந்து வியர்வையோடு கூடிய மயிர் பொங்க நாலாபக்கமும் சென்று உதறி மூர்க்கத்தனமாக முற்றி நிமிர்ந்து முழக்கம்

செய்து புறப்பட்டு வெளியே வருவதைப் போல'' என்பது உவமை.

''காயம்பூ நிறத்துக்கண்ணா! நீ உன் அரண்மனையில் இருந்து வெளிவந்து இங்கேவந்து அருளி வேலைப்பாடு உடைய அழகிய சிங்காசனத்தின்மீது அமர்ந்து எம் காரியம் ஆராய்ந்து அருள் செய்வாயாக'' என்பது செய்தி.

மன்னிக்கிடந்து—வெளியே மழை பெய்வதால் உள்ளே பொருந்தி நிலைத்து உறங்க வேண்டி ஏற்படுகிறது; அதனால் மன்னி என்று கூறினார்.

சீரிய சிங்கம் என்பதால் மிடுக்கு உடைய ஆண் சிங்கம் எனப் பொருள் கொள்க; சீர்—சிறப்பு.

வேரி மயிர்—வியர்வையோடு கூடிய மயிர்

மூரி—சோம்பல் முறித்து; மூர்க்கத்தனமாகச் சோம்பல் முறித்து; மூரி என்பது மூர்க்கம் என்ற பகுதியில் இருந்து அமைந்த வினைச்சொல் என்க.

காரியம்—செய்து தர வேண்டிய செய்தி; செயற்பாடு.

பூவைப்பூ வண்ணன் என்பது பாமாலை

## 24 அன்றிவ் வுலகம்
(புகழ் மாலை)

அன்றிவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி;
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்!
திறல்போற்றி;
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி;
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி;
குன்றுகுடையாய் எடுத்தாய்! குணம் போற்றி;
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி;
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய்.

**பதவுரை**

அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி—திரி விக்கிரம அவதாரத்தில் இவ் உலகத்தை உன் கால் அடிகள் கொண்டு அளந்தாய், உன்னைப் போற்றிப் புகழ்கிறோம்.

சென்று அங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி—இராவணனை அழித்தாய் உன் புகழ் பாடுறோம்.

பொன்றச்சகடம் உதைத்தாய் புகழ் போற்றி—அழிய வண்டியை உதைத்தாய்; உன் புகழைப் போற்றுகிறோம்

கன்று குணிலா எறிந்தாய் — கன்றை எறிதடியாக எய்தவனே

கழல் போற்றி—உன் வீரக்கழல் போற்றுகிறோம்.

குன்று குடையா எடுத்தாய்! குணம் போற்றி—மலையைக் குடையாகப் பிடித்தாய் உன் பண்பு போற்றுகிறோம்.

வென்று கைகொடுக்கும் நின் கையில் வேல் போற்றி—வெற்றியடைய உதவும் உன் கையின்கண் உள்ள நின் வேலைப் போற்றுகின்றோம்.

என்றென்றும்—எக்காலத்தும்

உன் சேவகமே ஏத்தி—உன் வீரத்தையே புகழ்ந்து பேசி

பறை கொள்வான் இன்று யாம் வந்தோம்—பறை பெற்றுக்கொள்ள இன்று யாம் வந்திருக்கிறோம்.

இரங்கு—எமக்கு இரங்கி அருள்க.

**தொகுப்புரை**

அன்று இந்த உலகத்தை உன் கால் அடிகளால் அளந்தாய்; தென்னிலங்கை அரசனை அழித்தாய்; சகடாசுரனை உதைத்து அழித்தாய்; கன்றை, எறிதடியாக விளா மரத்தில் எறிந்தாய்; குன்றைக் குடையாகப் பிடித்தாய்; வெற்றிக்குக் காரணமாக இருக்கும் உன் கைவேல் சிறப்புடையது. உன் திருவடியைப் போற்றிடுவோம். உன்

திறல் போற்றுகிறோம். உன் புகழ் போற்றுகிறோம். உன் கை வேலைப் போற்றுகிறோம். எக்காலத்திலும் உன் வெற்றிகளைப் புகழ்ந்து பறை கொள்ள விரும்புகிறோம். அதற்காக இன்று யாம் வந்திருக்கிறோம். இரக்கம் காட்டி அருள்க.

**விளக்கவுரை**

கண்ணனின் பல புகழ்களைப் போற்றிப் பாடும் சிறப்பு இதில் உள்ளது. ''உன்னைப் புகழ்ந்து பாடி நீ தரும் பரிசில் பெற விரும்புகிறோம். அதற்காகத்தான் இங்கு வந்திருக்கிறோம்'' என்று கூறப்படுவது இப்பாட்டின் கருத்தாகும்.

ஒவ்வொரு நிகழ்ச்சியை எடுத்துக்கூறி அதனால் வெளிப் படுகின்ற கண்ணனின் புகழ் தனித்தனியே கூறப்படுவது ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும்.

இப்பாடல் முழுவதும் கண்ணனின் புகழையே பேசுகிறது; பாமாலை என்பதற்கு இது முழு எடுத்துக் காட்டாக உள்ளது.

நாராணன் விளையாட்டுகள் பல இதில் கூறப் பட்டுள்ளமை காண்க.

1) திரிவிக்கிரம அவதாரம்;

2) இராம அவதாரம்;

3) கண்ணன் அவதாரம்.

இம்மூன்று அவதாரங்களின் நிகழ்ச்சிகள் ஈண்டுக் கூறப் பட்டுள்ளன.

கண்ணன் அவதாரத்தில் மூன்று நிகழ்ச்சிகள் கூறப்படு கின்றன.

1. சகடம் உதைத்தது;

2. கன்றை விளவின் மீது எறிந்தது;

3. குன்றைக் குடையாக எடுத்தது.

ஆகக் கண்ணனின் புகழ் மொழிகளாக ஆறு நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. இவற்றில் வற்புறுத்தப்படுவன.

1. திருவடிசசிறப்பு (உலகம் அளந்தது);
2. திறல் (இராவணனை அழித்தது);
3. புகழ் (சகடம் உதைத்தது);
4. ஆற்றல் (கன்றினை விளவின் மீது எறிந்தது);
5. குணம் (குன்றைக் குடையாக எடுத்தது);
6. வெற்றி (வேல் போற்றுதல்)

## 25. ஒருத்தி மகனாய்ப் பிறந்து

(பறைதருக எனல்)

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர
தரிக்கில னாகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம்; பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

**பதவுரை**

ஒருத்தி மகனாய்ப் பிறந்து—தேவகி மகனாகப் பிறந்து;
ஓர் இரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர—அதே இரவில் யசோதை மகனாக மறைந்து வளர,
தரிக்கிலன் ஆகி—இதைத் தாங்கிக் கொள்ள இயலாதவன் ஆகி,

தான் தீங்கு நினைத்த கருத்தைப் பிழைப்பித்து—அவன்
தானும் தீமை நினைத்தான்; அத் திட்டத்தைப்
பிழையாகும்படி செய்து,

கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே—
கம்சனின் வயிற்றில் நெருப்பாக நின்ற திருமாலே!

அருத்தித்து வந்தோம்—(பறையை) விரும்பிப் பெற
வந்தோம்

பறை தருதி யாகில்—யாம் கேட்ட பறையைத் தருவா
யானால்

திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி—மதிக்கத்
தக்க உன் செல்வத்தையும் வெற்றிகளையும் யாம் பாடி

வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து—உன் அருள் பெறாதிருந்த
வருத்தமும் தீர்ந்து மகிழ்வு பெறுவோம்.

**தொகுப்புரை**

தேவகி மைந்தனாகப் பிறந்தாய்; அதே இரவில் யசோதை மகனாக ஒளித்து வளர்ந்தாய்.

இதைக் கம்சன் தாங்கிக் கொள்ள இயலவில்லை; உன்னை அழிக்கப் பல திட்டங்கள் போட்டான்; அனைத்தையும் பொய்யாக்கி அவன் வயிற்றில் நெருப்பாக இருந்து பயத்தை உண்டு பண்ணினாய்.

நெடுமாலே! உன்னை நச்சி வந்தோம்; பறை தருவாயானால் உன் செல்வத்தையும் புகழையும் பாடுவோம்; அருள் பெறவில்லையே என்ற ஏக்கம் தீர்ந்து மகிழ்ச்சி பெறுவோம்.

**விளக்கவுரை**

கம்சனுக்கு அஞ்சிப் பிறந்த தாயிடம் வளர முடியாமல் மற்றொரு தாயை அடைந்தாய்; அஞ்சி ஒதுங்கினாலும் அவன் கிஞ்சித்தும் இரக்கம் காட்டாமல் வஞ்சித்துக் கொலை செய்யத் திட்டமிட்டான் என்பது உணர்த்தியவாறு.

பெற்றவள் உன்னை வளர்க்கும் பேறு பெறவில்லை. அத்தகைய சூழ்நிலையைக் கம்சன் உருவாக்கினான் என்பதும் உணர்த்தப்பட்டது.

நெருப்பு என்ன நின்றாய்—வயிற்றில் நெருப்பாக

நிமிர்ந்தாய்; வயிற்று எரிச்சல் அவனுக்கு என்பதுமாம்.

வயதில் சிறியவனாக இருந்தும் நீ அவன் மார்பில் நின்றது வாமன அவதாரத்தில் நெடுமாலாக நிற்பதைப் போல இருந்தது என்ற கருத்தைக் காண்க.

அவன் வயிற்றில் நீ நெருப்பாக அச்சுறுத்திக் கொண்டிருந்தாய் என்ற பொருளும் காண்க.

கஞ்சன்—கம்சன் என்ற சொல்லின் தமிழாக்கம்.

உன் அருளால்தான் உன்னைப் பாடமுடியும் என்பதாம்.

செல்வம்—என்றது கண்ணனின் பல்வேறு சிறப்புகள்.

சேவகம்—வெற்றிகள்.

ஒருத்தி மகனாகப் பிறந்து ஒருத்தி மகனாக வளர்ந்து கம்சனுக்கு நெருப்பாக நின்றது; திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி வருத்தம் தீர்வோம் எனல் பாமாலைப் பகுதி என்க.

## 28. மாலே! மணிவண்ணா!

(வேண்டுவன இவை எனல்)

*மாலே! மணிவண்ணா! மார்கழிநீ ராடுவான்*
*மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்*
*ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன*
*பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன் னியமே*

போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோலவிளக்கே! கொடியே! விதானமே!
ஆலினிலையாய்! அருளேலோ ரெம்பாவாய்.

**பதவுரை**

மாலே! மணிவண்ணா—விளிகள்;

மார்கழி நீராடுவான்—மார்கழி மாதம் நீராடுவதற்கு,
மேலையார் செய்வனகள்—மேன்மை பொருந்திய அடியவர்கள் செய்யும் செயல்களை ஒட்டி

வேண்டுவன கேட்டியேல்-எமக்கு என்ன தேவை என்று கேட்பாயானால்

பால் அன்ன வண்ணத்து உன்பாஞ்ச சன்னியமே—பால் நிறத்தை உடைய உன் பாஞ்ச சன்னியம் என்ற வெண்சங்கு

போல்வன சங்கங்கள்—போன்ற பல சங்குகளும்,
போய்ப்பாடு உடையனவே—சென்று எங்கும் ஒலிக்கும் பெருமை உடையனவாகிய

சாலப் பெரும் பறையே—மிக்க பெரிய பறைகளும்,
பல்லாண்டு இசைப்பாரே—பல்லாண்டு பாடக் கூடிய இசை வல்லவர்களும்,

கோல விளக்கே—அழகிய திருவிளக்குகளும்,
கொடியே—கொடிகளும்,
விதானமே—வெய்யில் தடுக்கும் மேல் கூரைச் சீலைகளும்;

ஆலின் இலையாய்—பிரளய காலத்தில் ஆலிலையின்மீது துயில் கொள்பவனே?
அருள்—தந்து அருள்வாயாக.

**தொகுப்புரை**

திருமாலே, மணிவண்ணா, மார்கழி நோன்புக்கு அடியவர்களாகிய யாம் உன்னிடம் வேண்டுவன யாவை என்று நீ கேட்பாயாகில் உன் பாஞ்ச சன்னியம் போன்ற வெண் சங்குகள் பலவும், பேரொலிதரும் பறைகளும், பல்லாண்டு பாடுவோரும், திருவிளக்குகளும்; கொடிகளும், விதானங்களும் ஆகியவையாகும். ஆலின் இலையில் துயில்கொள்ளும் தலைவனே! நீ இவற்றைத் தந்தருள்வாயாக,

**விளக்கவுரை**

மணிவண்ணன்—நீல மணி போன்ற நிறத்தவன்
மேலையார்—மேன்மை மிக்க அடியவர்கள்;
பாஞ்ச சன்னியம் என்பது திருமாலின் கையில் உள்ள சங்கு; இது உவமை;

விதானம்—துணியால் ஆகிய மேல் கூரைச் சிலை;
பால் அன்ன சங்கு—வெண்சங்கு;
போய்ப்பாடு உடையன—ஒலி எங்கும் கேட்பன; இப் பறைகள் பேரொலி ஒலிப்பன என்பதாம்.

பாடு—ஒலி
விதானம்—கவிழ்த்து மூடும் முரட்டுத்துணி.
மாலே, மணிவண்ணா, ஆலின் இலையாய்—திருநாமங்கள்; பாமாலை என்க.

## 27. கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா

(மகிழ்ச்சி கொளல்)

கூடாரை வெல்லும சீர்க்கோவிந்தா! உன் தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சன்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே, தோள் வளையே, தோடே, செவிப்பூவே

பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போம்; அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

**பதவுரை**

கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா—பகைவரை வெல்லும் சிறப்பு உடைய கோவிந்தா!

உன் தன்னைப் பாடிப் பறைகொண்டு யாம் பெறும் சன்மானம்—உன்னைப் பாடிப் பறையை ஏற்றுக்கொண்டு அதற்கு மேலும் யாம் பெறும் பரிசுப் பொருள்கள்

நாடு புகழும் பரிசினால்—நாட்டு மாந்தர் புகழும் வகையினால்

நன்றாக—மிகுதியாக.

சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப்பூவே, பாடகமே என்று அனைய பல்கலனும்—இங்குக் கூறப்படும் பல அணிகலன்களையும்

யாம் அணிவோம்—யாம் அணிந்து கொள்வோம்;

ஆடை உடுப்போம் — புதிய ஆடைகளை உடுத்திக் கொள்வோம்;

அதன்பின்னே பால் சோறு—அதன் பிறகு பால் சோறு (அதனை)

மூட நெய் பெய்து—அச்சோற்றினை மூடும் அளவுக்கு நெய் பெய்து,

முழங்கை வழிவார—முழங்கைவழி வடிய.

கூடியிருந்து குளிர்ந்து—யாம் கூட்டமாக இருந்து உண்டு மகிழ்ச்சி அடைவோம்.

## தொகுப்புரை

பகைவர்களை வெல்லும் சீர்மையுடைய கோவிந்தா! உன்னைப் பாடிப் பறை கொள்வோம்; அதற்கு மேலும் யாம் பெறும் நன்கொடைப் பொருள்கள் நாட்டவர் புகழும்படியாகச் சூடகம், தோள்வளை, தோடு, செவிப்பூ, பாடகம் என்று இத்தகைய பல்வகையான அணிகலன்கள் இவற்றை அணிவோம்; பல் வகை ஆடைகளை உடுப்போம்; அதற்குப் பிறகு பால் சோறு, நெய் பெய்து முழங்கையில் ஒழுகி வழியும்படி சுற்றத்தினரோடு கூடி யிருந்து அமர்ந்து உண்டு உரையாடி மனம் குளிர்வோம்.

## விளக்கவுரை

கூடார்—நம்மோடு பொருந்தாதவர்; பகைவர்; சூடகம், தோள் வளை, தோடு—இவை மூன்றும் தோளுக்கு அணியும் அணிவகைகள்;

செவிப்பூ—காதணி.

பாடகம்—கால் அணி; பல் கலன் என்றதால் ஆடையும் பலவகை என்று கொள்ளுதற்கு இடம் தருகிறது. புதிய ஆடைகள் எனப்பொருள் கொள்வது சிறப்பாகும்.

பாற்சோறு—பால் இட்டுப் பொங்கிய சோறு;

மூட நெய் பெய்து—மூடுமாறு நெய் பெய்து. மிகுதியாகப் பெய்து;

ஆழ்வாகள் பொதுவாக வேண்டுவன நெய் கலந்த சோறு, புத்தாடை, பல்வகை அணிகள் என்பது பெரியாழ்வார் பாடலிலும் தெரிகிறது.

> ''நெய்யுடை நல்லதோர் சோறும் நியதமும் அத்தாணிச் சேவகமும்
> கையடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும்

மெய்யிடை நல்லதோர் சாந்தமும் தந்து என்னை
வெள்ளுயிர் ஆக்கவல்ல
பையுடை நாகப்பகைக் கொடியானுக்குப் பல்லாண்டு
கூறுதுமே—

திருப்பல்லாண்டு—8.

கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா; கோவிந்தன் (பசுக்களைக் காத்தவன்); புகழ்மாலை.

## 28. கறவைகள் பின்சென்று

(பறை தருக எனல்)

*கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்,*
*அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்*
*பிறவிப் பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்,*
*குறைவொன்று மில்லாத கோவிந்தா!*
*உன் தன்னோடு*
*உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது;*
*அறியாத பிள்ளைகளோம் அன்பினால்*
*உன் தன்னைச்*
*சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே*
*இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.*

**பதவுரை**

**கறவைகள் பின் சென்று**—பசுக்களின் பின்னால் ஓட்டிச் சென்று.

**கானம் சேர்ந்து உண்போம்**—காட்டுக்குச் சென்று அங்குக் கட்டுச் சோறு அவிழ்த்து உண்போம்;

**அறிவு ஒன்றும் இல்லாத ஆய்க்குலத்து**—அறிவு சிறிதும் இல்லாத ஆயர் குலத்தில்.

உன் தன்னைப் பிறவிப் பெறுந்தனை புண்ணியம் யாம் உடையோம்—நீ எங்களில் ஒருவனாகப் பிறக்கும் புண்ணியத்தைப் பெற்றுள்ளோம்.

குறைவு ஒன்றும் இல்லாத கோவிந்தா—குறைவு எதுவும் இல்லாத எம் தலைவனே!

உன் தன்னோடு உறவு (ஏல்) நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது—உன்னோடு எமக்கு உள்ள உறவினை இங்கு யார் ஒழிக்க நினைத்தாலும் அது தீராது.

அறியாத பிள்ளைகளோம் — உலக நடை மிகுதியும் அறியாத பெண் பிள்ளைகள் யாம்;

அன்பினால் உன் தன்னைச் சிறுபேர் அழைத்தனவும்— உன் மீது உள்ள பேரன்பினால் உன்னைப் பெயரிட்டு அழைத்திருந்தாலும்.

சீறி அருளாதே—கோபிக்காது பொறுத்தருள்க.

இறைவா!—தலைவனே!

நீ தாராய் பறை—நீ எமக்கு வேண்டிய பறை வாத்தியம் தருக.

**தொகுப்புரை**

பசுக்களைக் காட்டுக்கு மேய ஓட்டச் செய்து அங்கே உணவு உண்ணும் எளிய வாழ்க்கையினர் யாம்;

கல்வியறிவு மிக்கு இல்லாத எளிய வாழ்க்கையுடைய ஆயர் குலத்தில் நீ பிறந்து எமக்குப் பெருமை தேடித் தந்திருக்கிறாய்; எந்தக் குறையும் இல்லாத எம் தலைவனே! உனக்கும் எங்களுக்கும் உள்ள உறவினைப் பிறர் ஒழிக்க நினைத்தாலும் அது நீங்காது; ஒழியாது.

அறியாத பெண் பிள்ளைகள் யாம்; உன் பெருமை அறியாது உரிமையால் சிறுபேர் இட்டு உன்னை அழைத்

இருந்தாலும் நீ கோபித்துக் கொள்ளாதே; பொறுத்தருள்க; இறைவா! நீ எமக்கு நோன்பு இயற்றப் பறை தருக! அதுவே யாம் வேண்டுவது.

**விளக்கவுரை**

கறவைகள்—பால் கறக்கும் பசுக்கள்;

கானம்—கானகம் என்பது கானம் என ஆயிற்று; கான் என்பதே அடிப்படைச் சொல்; கான்+அகம் கானகம்.

ஒன்றும்—சிறிதும்;

(உறவு) ஏல்—ஏல் அசைச்சொல்; பொருளற்றது.

பிள்ளைகள்—இது மகளிர் பாடுவதாக அமைவது; பெண் பிள்ளைகள் சிறுமிகள் என்று பொருள் கொள்வது பொருந்தும்.

சிறுபேர் — பெரியவர்களைப் பெயரிட்டு அழைத்தல் தவறு; அப்படி அழைக்கக் கூடாது. அவ்வாறு பெயர் இட்டு அழைப்பது எமக்கு இயல்பாகிவிட்டது; அதைப் பொறுத்துக் கொள்க; அதற்குக் காரணம் உன் மீது யாம் கொண்டுள்ள அன்பே ஆகும். சிறப்பு அடைதராமல் வெறும் பெயரிட்டுக் கூறுவது சிறுபேர்; உறவு பற்றி அழைப்பதே பெருமை; நேரே பெயர் சொல்லி அழைப்பது மரியாதை இன்மை என்று கருதப்படும்.

பறை தருதல்—நோன்பு விழாவிற்குப் பறை தேவைப் படுகிறது. அதனைக் கொட்டி வழிபடுவர் என்று தெரிகிறது.

குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா; இறைவா—

## 29. சிற்றஞ் சிறுகாலே

(ஆட்செய்வோம் எனல்)

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச சேவித்து உன்
பொற்றா மரையடியே போற்றும்
பொருள்கேளாய்;
பெற்றம்மெய்த் துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது;
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண்
கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம்; உனக்கே நாம்
ஆட்செய்வோம்;
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

**பதவுரை**

சிற்றம் சிறு காலே—விடியற் காலையில்

வந்து உன்னைச் சேவித்து—வந்து உன்னை வழிபட்டு

உன் பொற்றாமரையடியே போற்றும் பொருள்

கேளாய்—உன் திருவடிகளை வணங்குவதன் நோக்கம் எது? அதனைக் கேட்பாயாக!

பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து— ஆயர் குலத்தில் நீ பிறந்தாய்;

குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது—

(உனக்கு பணிசெய்வதே எம் கடமையாகும்) நீ இடும் சிறு கட்டளைகளை ஏற்று யாம் நடக்கக் கடவோம்;

இற்றைப் பறை கொள்வான் அன்று—இன்று ஏதோ

தரும் பறையைப் பெறுவதற்கு மட்டும் அல்ல.

கோவிந்தா—எங்கள் தலைவனே!

எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்—என்றைக்கும்
தொடர்ந்து வரும் ஏழு ஏழு பிறவிகளுக்கும்;

உன் தன்னோடு உற்றோமே யாவோம்—உன்னோடு
உறவு கொண்டவர்கள் ஆகிறோம்;

உனக்கே நாம் ஆட் செய்வோம்—உனக்கே யாம்
அடிமைப்பட்டுப் பணிகள் செய்வோம்.

மற்றை நம் காமங்கள் மாற்று—ஏனைய எம்
ஆசைகளை அகற்றி விடுக.

### தொகுப்புரை

விடியற் காலையில் வந்து உன்னை வழிபட்டு வணங்கு கிறோம். யாம் அறிவிக்கும் செய்தி இது;

ஆயர் குலத்தில் நீ பிறந்திருக்கிறாய்; நீ எம் தலைவன்; நீ இடும் கட்டளைகளை ஏற்று நடப்போம்;

பறை பெறுவதற்கு மட்டும் உன்னை அணுகவில்லை. எப்பிறவியிலும் தொடர்ந்து இதே போலப் பணி செய்ய எம்மை ஆட் கொள்வாய்; எம் ஏனைய ஆசைகளை அகற்றி விடுக.

### விளக்கவுரை

சிற்றம் சிறு காலே—அதிகாலை என்பது பொருள்—

அடுக்குத் தொடர். மிகச் சிறிய காலைப் பொழுது;
மிகுதியை உணர்த்தும் அடுக்கு;

சிற்றம் சிறு—சிறு + அம் + சிறு

அம்—பகுதிப்பொருள் விகுதி;

பொற்றாமரை—பொன்+தாமரை;
பெற்றம்—பசு; வட்டார வழக்குச் சொல்;
இற்றை—இன்று என்பது வேற்றுமைத் தொடரில்
இற்றை எனத் திரிந்தது; வல்லெழுத்துப் பெற்றது.

கொள்வான்—கொள்ள; வினை எச்சம்.

எற்றைக்கும்-இற்றை நோக்கி எற்றை என அமைந்தது
இதுவும் வேற்றுமைத் தொடரில் வல்லெழுத்துப்
பெற்றது.

ஏழுஏழு என்பது தொடர்ந்து வரும் பிறவிகளைக்
குறிக்கின்றது எண் குறிக்க வந்தது அன்று.

மற்றை—ஏனைய; நம்—எம் என்ற பொருளில்
வந்துள்ளது.

என்றும் உறவு தொடர்வதாக என்று வேண்டுகின்றார்.

''அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு'' என்ற பெரியாழ்வார் பாசுரத்தோடு ஒப்பிட்டுக் காண்க.

## 30. வங்கக் கடல் கடைந்த

(இது பாமாலை எனல்)

வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கு அப்பறை கொண்ட வாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர் பிரான் கோதை
சொன்ன
சங்கத்தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கு இப் பரிசுரைப்பார் ஈரிரண்டு
மால்வரைத்தோள்

செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்றின்புறுவ ரெம்பாவாய்

**பதவுரை**

வங்கக்கடல் கடைந்த மாதவனை—திருப்பாற் கடலைக் கடைந்து அமுதம் தந்த மாதவனை (மிக்க தவப்பேறு உடையவனை);

கேசவனை—அழகிய திருமுடி உடையவனை;

திங்கள் திருமுகத்துச் சேயிழையார்—மதி போன்ற முகத்தை உடைய செல்வ மகளிர்

சென்று இறைஞ்சி—சென்று வணங்கி;

அங்கு அப்பறை கொண்ட ஆற்றை—அங்கு அந்தப் பறையைக் கொண்ட நெறி முறையை;

அணிபுதுவைப் பட்டர்பிரான் கோதை சொன்ன-அழகிய புதுவை என்னும் ஊரில் வாழும் விட்டுசித்தர் என்னும் பெரியாழ்வாரின் மகள் ஆண்டாள் சொன்ன

சங்கத் தமிழ் மாலை முப்பதும்—தூய செந்தமிழ்ப் பாடல்கள் முப்பதினையும்

தப்பாமே இங்கு இப்பரிசு உரைப்பார்—தவறாமல் இங்கு இவ்வகையில் உரைப்பவர்

ஈரிரண்டுமால் வரைத் தோள்—மலை போன்ற நான்கு பெரிய தோள்களை உடைய

செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்—அழகிய கண்களை உடைய திருமாலால்

எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்—எல்லா இடத்தும் திருவருள் பெற்ற இன்பமடைவர்.

**தொகுப்புரை**

திருப்பாற் கடலைக் கடைந்த மாதவனும் கேசவனும் ஆகிய திருமாலை அடைந்து அவனிடம் பறையைப் பரிசாகப் பெற்றுக் கொண்ட செய்தியை ஆண்டாள் சொன்ன செந்தமிழ்ப்பாட்டு முப்பதினையும் இங்கு அதன் வடிவு கெடாமல் உரைப்பவர் நாராயணன் திருவருளைப் பெற்று எங்கும் இன்புறுவர்.

**விளக்கவுரை**

வங்கக்கடல்—ஈண்டு திருப்பாற்கடலை உணர்த்தியது.

வங்கம்—வளைவினை உடையது என்பது பொருள்.

பறை கொள்ளுதல்—கண்ணனைப் பாடிப் பறையைப் பரிசாகப் பெறுவர்; அப்பறையை அடித்துப் பேரொலி எழுப்பிப் பாவையை வழிபட்டு நோன்பினை முடிப்பர் என்பதாம்.

## ஆய்வுச் செய்திகள்

### 1. தனியன்கள்

தனியன் என்ற தலைப்பு
நூலுக்கு முன் இடம் பெற்றுள்ளது.
அதில் இரண்டு பாடல்கள் இடம் பெற்றுள்ளன;
அவை பின் வருமாறு;
''அன்னவயல் புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை; பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.''
''சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே! தொல்பாவை
பாடியருள வல்ல பல்வளையாய்—நாடி நீ

வேங்கடவற்கு என்னை விதி என்ற இம்மாற்றம்
நாம்கடவா வண்ணமே நல்கு.

திருப்பாவையை நற்பாமாலை என்று தெளிவாகக் கூறுகிறது முதற்பாட்டு.

நாச்சியார் திருமொழி அடுத்த தொகுப்பு; அதன் உள்ளடக்கம் ''வேங்கடவனுக்கு என்னை விதிப்பாய்'' என்று கூறும் செய்தி எனத் தெளிவாகக் கூறுகின்றது.

## 2. நீராடுவதற்கு மகளிரை எழுப்புதல் கூறப்படுகிறது.

1. ''நீராடப் போதுவீர் போதுமினோ''—1
1. ''பிள்ளாய் எழுந்திராய்''—6
3· ''நாயகப் பெண் பிள்ளாய்...
திறவேலோர் எம்பாவாய்''—7
4. ''பாவாய் எழுந்திராய்''—8
5· ''ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ''—9
6. ''தோற்றமாய் வந்து திற''—10
7. ''எற்றுக்கு உறங்கும் பொருள்''—(11)
8. ''இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்''—12
9. ''பள்ளிக் கிடத்தியோ பாவாய் நீ நன்னாளால்''—(13)
10. ''நங்காய் எழுந்திராய்''—(14)
11. ''சில்லன்றழையேன்மின் நங்கைமீர் போதர். கின்றேன்''—(15)

**3. இறைவனைப் பாடுதல் இப்பாவையில் மிகுதியாக இடம் பெற்றுள்ளது. இதனைப் பாமாலை என்று கூறலாம்.**

கண்ணனைப் பாடிப்பரவுதல், அவன் நாமம் கூறுதல் என இருவகையைக் காணலாம்.

1. ''நந்தகோபன் குமரன், யசோதை இளங்சிங்கம்,
நாரணன் நமக்கே பறைதருவான்'' (1)

2. ''பாற்கடலுள் பையத்துயின்ற பரமன் அடி
பாடி'' (2)

3. ''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி'' (3)

4. ''ஆழிமழைக் கண்ணா'' (4)

5. ''மாயனை மன்னுவடமதுரை மைந்தனை
யமுனைத் துறைவனை தாமோதரனை
மலர் தூவித்தொழுது வாயினாற்பாடி
மனத்தினால் சிந்திக்கப் பிழைகள் தூசாகும்'' (5)

6. ''வெள்ளத்தரவில் துயில் அமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெல்ல எழுந்து அரி என்ற
பேரரவம் உள்ளம் புகுந்து குளிர்ந்து'' (6)

7. ''நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும் நீ
கேட்டே கிடத்தியோ'' (7)

8. ''மா வாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனை'' (8)

9. ''மாமாயன் மாதவன் வைகுந்தன் என்று நாமம்
பலவும் நவின்று'' (9)

10. ''நாற்றத் துழாய் முடி நாராயணன்'' (10)

11. ''முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட''(16)

12. ''மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய்''—12

13. ''புள்ளின் வாய்கீண்டானைப் பொல்லா அரக் கனைக் கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடி''—13

14. ''சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்; பங்க யக்கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்.''—14

15. ''வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்ற ழிக்க வல்லானை மாயனைப் பாடேலோ ரெம் பாவாய்''—15

16. ''மாயன் மணிவண்ணன் நென்னலே வாய் நேர்ந் தான்;'' —16

17. ''அறஞ்செய்யும் எம்பெருமான்!
நந்த கோபாலா எழுந்திராய்;
உலகளந்த உம்பர் கோமானே
உறங்காது எழுந்திராய்.—17

18. ''உன் மைத்துனன் பேர் பாட''—18

19. ''நப்பின்னை கொங்கை மேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா!''—19

20. ''அமரர்க்கும் முன் சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே!''—20

21. ''பெரும் பசுக்கள் ஆற்றல்
படைத்தான் மகனே! அறிவுறாய்!''—21

22. ''அங்கண் இரண்டும் எங்கள் மேல் நோக்குதியேல் எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பா வாய்.''—22

23. ''உலகம் அளந்தாய்! தென்னிலங்கை
செற்றாய்; சகடம் உதைத்தாய்;
கன்று குணிலாக எறிந்தாய், குன்றைக்
குடையாக எடுத்தாய்; சென்று பகை
கெடுக்கும் நின் கையில் வேல்போற்றி;''—24

24. ''கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே!''—25

25. ''மாலே மணிவண்ணா''

26. ''ஆலினிலையாய்! அருளேலோ ரெம்பாவாய்''-26

27. ''கூடாரைவெல்லும் சீர் கோவிந்தா''—27

28. ''குறைவு ஒன்றும் இல்லாத கோவிந்தா!
இறைவா நீ தாராய் பறை.''—28

29. ''உன் பொற்றாமரை அடியே
போற்றும் பொருள் கேளாய்;
இற்றைப் பறை கொள்வான் அன்றுகாண்
கோவிந்தா!
உனக்கே யாம் ஆட் செய்வோம்''—29

30. ''வங்கக் கடல் கடைந்த மாதவனைக்
கேசவனைச் சென்று இறைஞ்சி
செல்வத் திருமாலால் எங்கும் திருவருள்
பெற்று இன்புறுவர்''—30

ஒவ்வொரு பாட்டிலும் இறைவன் பெயரும், புகழும், செயலும், சிறப்பும் கூறப்படுதல் காண்க. எனவே இது நற்பாமாலை என்ற கருத்து வலிவு பெறுகிறது.

## 4. பொழுது விடிந்தது துயில் எழுக எனல்

பொழுது விடிந்தது எழுக என்று கூறும் செய்தி மிக்க இடம் பெற்றுள்ளது.

1. ''மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாள்'' (1)

2. ''புள்ளும் சிலம்பினகாண்
புள்ளரையான் கோயில்
வெள்ளைவிளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ''
(6)

3. ''ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவும் கேட்டிலையோ?''
''ஆய்ச்சியர் மத்தினால் ஓசைப்படுத்தவும்
கேட்டிலையோ?''

''கேசவனைப் பாடவும் நீ கேட்டே
கிடத்தியோ?'' 7

4. ''கீழ்வானம் வெள்ளென்று எருமை
சிறு வீடு மேய்வான் பரந்தன காண்'' 6

5. ''வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று;
புள்ளும் சிலம்பினகாண்'' 13

6. ''உங்கள் புழைக் கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து
ஆம்பல்வாய் கூம்பினகாண்;
''தவத்தவர் சங்கிடுவான் போதந்தார்''—14

7. ''வந்து எங்கும் கோழி அழைத்தனகாண்;
மாதவிப் பந்தல்மேல் பல்கால்
குயிலினம் கூவினகாண்'' 18

விடியற்காலை நிகழ்ச்சிகள் மேற்கண்டவாறு கூறப்படுகின்றன.

## 5. நோன்பு பற்றிய செய்திகள்

1. ''மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ'' 1

2. ''நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ;

பரமன் அடிபாடி நெய்யுண்ணோம்.
பால் உண்ணோம்; நாட்காலை நீராடி
மையிட்டு எழுதோம்; மலரிட்டு நாம் முடியோம்;
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்
றோதோம்;''
''ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறு எண்ணி உகந்து.'' —2

3. ''நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து பெரும்
பசுக்கள் நீங்காது செல்வம் நிறையும்''—3

4. ''தாமோதரனைத் தூமலர்த் தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்து''—5
''சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்;
பயங்கயக் கண்ணானைப்பாடேல் ஓர்எம்பாவாய்''
—14

5. ''என்றென்றும் உன்சேவகமே ஏத்திப் பறை
கொள்வான்
இன்று யாம் வந்தோம்''

6. ''உன்தன்னைப் பாடிப் பறைகொண்டு
யாம் பெறும் சன்மானம்;
சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப்பூவே,
பாடகமே என்று அனைய பல்கலனும் யாம்
அணிவோம்;
ஆடையுடுப் போம், அதன்பின்னே பாற் சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்து'' (மகிழ்வோம்)—27

7. "இறைவா நீ தாராய் பறை"—28

8. "இற்றைப் பறை கொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட் செய்வோம்;"—29

9. "அங்கு அப்பறை கொண்ட ஆற்றை அணி புதுவைப்
பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ் மாலை முப்பது"—7

## 6. பாவை வழிபாட்டுக்குத் தேவைப்படும் பறை இசைக்கருவி; அதைப் பெறுவது வைத்துக் கண்ணின் வழிபாடு இடம் பெறுகிறது.

1. "நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்"—1

2. "பாவாய்! எழுந்திராய் பாடிப் பறை கொண்டு
......................................
தேவாதி தேவனைச் சேவித்தால்"—8

3. "நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால்
போற்றுப் பறை தரும்"—10

4. "ஆயர் சிறுமியரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்"—16

5\. ''என்றென்றும் உன் சேவகமே ஏத்திப்பறை
கொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கேலோர் எம்
பாவாய்'' —4

6\. ''நெருப்பு என்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதி'' —25

7\. ''மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன
கேட்டியேல்
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடு உடையனவே
சாலப்பெரும் பறையே பல்லாண்டிசைப்பாரே''
—26

8\. ''இறைவா நீ தாராய் பறை; ஏலோர் எம்
பாவாய்.'' —28

## 7. திருப்பள்ளி எழுச்சி

இவை கண்ணனின் திருப்பள்ளி எழுச்சியாகவும், அவன் புகழ்ச்சியாகவும், ஆயமகளிரின் முறையீடாகவும் உள்ளன என்பதை அறிக.

கண்ணனை எழுப்புவதற்கு முன் நப்பின்னையை விளித்து அவனை எழுப்பித்தருமாறு வேண்டுகின்றனர். அவன் அரண்மனைக்குச் சென்று வாயில் காப்போனை விளித்துக் கதவு திறக்குமாறு கூறுகின்றனர்; நந்தகோபன், யசோதை, பலராமன் இவர்களையும் எழுப்புகின்றனர்.

இவை திருப்பள்ளி எழுச்சி பாடல்களாக உள்ளன; அவை பின் வருமாறு:

1. ''வாயில் காப்பானே!
நேய நிலைக் கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்''
—16

2. ''எம்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய்''
''எம்பெருமாட்டி யசோதாய் அறிவுறாய்''
''உம்பர் கோமானே எழுந்திராய்''
''பலதேவா உறங்கேல்''—17

3. ''நப்பின்னாய்!
செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப
வந்து திறவாய்''—18

4. ''நப்பின்னாய் திருவே துயில் எழாய்''

5. ''தோற்றமாய் நின்ற சுடரே துயில் எழாய்''—21

## 8. இறைவனிடம் வேண்டுவது

பறையைக் கேட்டுப் பெறுதல் என்பதோடு

ஆழ்வார்கள் இறைவனைப்பாடி வேண்டுவது அவன் உறவையே; அதனை ஈற்றில் ஆண்டாள் பாடல் முடிக்கிறது.

''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு

உற்றோமேயாவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம்'' என்று முடிக்கிறது.
—29.

☆ ☆ ☆

# அணியக வெளியீடுகள்

Phone No. 611230

பேராசிரியர் டாக்டர் ரா. சீனிவாசன்
எம். ஏ; எம். லிட்; பிஎச். டி
No: 5, செல்லம்மாள் தெரு,
செனாய் நகர், சென்னை-600030.

| | | |
|---|---|---|
| 1. | கம்ப ராமாயணம் | 30-00 |
| 2. | மாபாரதம் | 30-00 |
| 3. | சீவக சிந்தாமணி | 25-00 |
| 4. | திருவிளையாடற்புராணம் | 30-00 |
| 5. | கண்ணனின் திருக்கதை | 15-00 |
| 6. | நளன் தமயந்தி | 15-00 |
| 7. | நவீன தெனாலிராமன் | 10-00 |
| 8. | குப்பை மேடு | 25-00 |
| 9. | படித்தவள் | 25-00 |
| 10. | பரிசு மழை | 15-00 |
| 11. | அணியும் மணியும் | 30-00 |
| 12. | நாலடியார் செய்திகள் | 20-00 |
| 13. | திருக்குறள் செய்திகள் | 40-00 |
| 14. | சங்க இலக்கியத்தில் உவமைகள் | 60-00 |
| 15. | மொழியியல் | 50-00 |
| 16. | திருப்பாவை விளக்கவுரை | 20-00 |
| 17. | திவ்விய பிரபந்த சாரம் | 15-00 |